பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 23 திங்கட்கிழமை (06.06.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :192

### பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தினால்

# அரசில் மட்டுமன்றி மாகாண சபைகளிலும்

# ஆதரவை விலக்க ஜே.வி.பி. தீர்மானம்!

## அக்கட்சியின் அரசியல் குழு நேற்று அவசரமாகக் கூடி முடிவு

கொழும்பு,ஜூன்6

**பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுமானால் அரசிலிருந்து வெளியேறுவதுடன் நின்றுவிடாமல் மாகாண சபையில் உள்ள அரசுகளுக்கு வழங்கிவரும் ஆதரவையும் விலக்கிக்கொள்ள ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது. அக்கட்சியின் அரசியல் குழு நேற்றுக் கொழும்பில் அவசரமாகக் கூடி இந்த முடிவை எடுத்துள்ளது.**

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தும் ஜனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைக்குப் பதிலடியாகப் பல தொடர் நடவடிக்கைகளை எடுக்கும் தவிர முடிவுக்கு வந்திருக்கிறது அவரின் கூட்டமைப்பு அரசின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.

உத்தேசப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக இந்தியாவின் அனுமதியைப் பெற்று நாடு திரும்பியிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அது தொடர்பாக வெகுவிரைவில் உறுதியான தீர்மானங்களை வெளியிடலாமென்பதால் நேற்று அவசரமாகக் கூடிய ஜே.வி.பியின் அரசியல் குழு சில முக்கிய முடிவுகளை எடுத்திருக்கின்றது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் ஜனாதிபதி அதிரடியான தீர்மானங்களை அறிவிக்கலாமெனப் பரவலாக எதிர்பார்க்கப்படும் நிலையில் ஜே.வி.பியின் அரசியல் குழுக்கூட்டம் நேற்றுக் காலை நுகேகொடையில் உள்ள கட்சியின்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழு முக்கியஸ்தர் சுடப்பட்டார்!

மட்டக்களப்பு மாவட்ட எல்லைப்புற பிரதேசமான ரிதிதென்னையில் நேற்றுமுன்தினம் இரவு கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் மீது இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் அந்தக் குழுவின் முக்கியஸ்தரான மருதமேனன் (சுந்தரலிங்கம் சுரேஷ் வயது-22) கொல்லப்பட்டார். இவர் களுதாவளையைச் சேர்ந்தவராவார்.

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள அவர்களது மறைவிடமொன்றிலிருந்து கருணா குழுவைச் சேர்ந்த 4பேர் பிக்-அப் வாகனத்தில் பொலன்னறுவை நோக்கிப் பயணம்

(14ஆம் பக்கம் பார்க்க)

## சிவகுமாரனின் நினைவு தினம் நேற்று எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்6

தமிழ்த்தேசியப் போராட்ட வரலாற்றில் தற்கொடை ஈந்த முதல் மாவீரர் பொன். சிவகுமாரனின் 31ஆவது ஆண்டு நினைவுதினம் நேற்று எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனையொட்டி அவரது சொந்த ஊரான உரும்பிராயில் நினைவு நிகழ்வு இடம்பெற்றது. இதில் காலை நிகழ்வு உரும்பிராய் சந்தியில் உள்ள அவரது நினைவுத் தூபியில் இடம்பெற்றது. மாலை நிகழ்வில் முன்னதாக உரும்பிராய் இந்துக் கல்லூரியில் இருந்து பொன். சிவகுமாரனின் திருவுருவப் படம் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது. அந்த ஊர்வலம் கல்லூரி மைதானத்தை அடைந்தது.

அங்கு பொதுச் சுடரினை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் தமிழீழத் தேசியக் கொடியை கோப்பாய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் து.கிரியும் ஏற்றிவைத்தனர்.

முதன்மைச் சுடரை யாழ். மாவட்ட அரசியல்

(14ஆம் பக்கம் பார்க்க)



பொன். சிவகுமாரனின் நினைவு நிகழ்வில் அவரது தாயார் தனது புதல்வரின் திருவுருவப் படத்திற்கு சுடரேற்றுகிறார்.

## ஆனைக்கோட்டையில் நேற்று இளைஞர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,ஜூன்6

ஆனைக்கோட்டைப் பகுதியில் நேற்று முற்பகல் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்று முற்பகல் 11 மணியளவில் ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோயிலின் பின் வீதியில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

இறந்தவர் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த அசோக் (வயது-32) என்பவர் என்றும் -

கன்னாதிட்டிப் பகுதியில் குடியிருந்த இவர் ஓர் ஓட்டோ சாரதி என்றும் -

முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்தது.

சிவப்பு நிற மோட்டார் சைக்கிள் ஒன்றில்

(14ஆம் பக்கம் பார்க்க)

## குருநகர் இளைஞர்கள் இருவர் கொழும்பில் கொல்லப்பட்டனர்

கொழும்பு,ஜூன்6

யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த இரு தமிழ் இளைஞர்கள் நேற்று அதிகாலை கொழும்பு, கொட்டாஞ்சேனையில் இனம்தெரியாதவர்களால் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

குருநகர் கடற்கரை வீதி, முதலாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்தவர்களான அரியராசா குருதாஸ் (வயது-24), குருநகர் மத்திய கிழக்கு வீதியைச் சேர்ந்த தேவதாஸ் சுரேஷ் (வயது-23) ஆகிய இருவருமே கொல்லப்பட்டனர்.

நேற்று விடிகாலை கொழும்பு கோட்டையில் இருந்து மட்டக்குளி நோக்கிச் சென்ற பஸ்ஸில் பயணித்து வந்த இளைஞர்கள் கொட்டாஞ்சேனை

(14ஆம் பக்கம் பார்க்க)

## சிவராம் படுகொலை தொடர்பாக புளொட் உறுப்பினர் இருவர் கைது

கொழும்பு,ஜூன்6

ஊடகவியலாளர் சிவராம் படுகொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் புளொட் உறுப்பினர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கைதுசெய்யப்பட்டவர்களுள் ஒருவர் புளொட் அமைப்பின் இராணுவப் பிரிவுத் தலைவர் பீற்றர் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சந்தேகநபர்களை விசாரணை செய்ததில் இக்கொலையுடன் தொடர்புடைய முக்கிய தகவல்கள் அம்பலமாகியுள்ளன என்றும்-

விசாரணைகளைத் தொடரும்போது மேலும்

(14ஆம் பக்கம் பார்க்க)

### பொதுக்கட்டமைப்புக்கு எதிராக

## தலதாமாளிகை முன் இன்று முதல் ஹெல உறுமயவினர் சத்தியாக்கிரகம்

கொழும்பு,ஜூன்6

உத்தேசப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான அரசின் யோசனையை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று வலியுறுத்தி சத்தியாக்கிரகப் போராட்டமொன்றை ஜாதிக ஹெலஉறுமய இன்று கண்டி தலதா மாளிகையின் முன்பாக ஆரம்பிக்கின்றது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான அரசின் யோசனை கைவிடப்படும் வரை இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் இங்கு தொடர்ந்து நடத்தப்படுமென்று ஜாதிகஹெல உறுமயவின் பேச்சாளரொருவர் கூறினார்.

முன்னதாக உத்தேசப் பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று மாலை

(14ஆம் பக்கம் பார்க்க)

### உரிய ஒழுங்குகளைச் செய்து தரத் தவறினால்

# அரச பகுதிகளின் ஊடாகப் புலிகள் சுயபாதுகாப்புடன் செல்ல நேரும்!

### தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை

தமது உறுப்பினர்களுக்கு அரசு கட்டுப்பாட்டுப் பகுதியில் போக்குவரத்துப் பாதுகாப்பு வழித்துணையை வழங்குவது மறுக்கப்படுமானால் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகள் தமது சுயபாதுகாப்புடன் செல்லவேண்டிவருமென்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்திருக்கிறார்.

இவ்விடயம் தொடர்பாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்திருக்கும் தமிழ்ச்செல்வன், இவ்வாறான பாதுகாப்பு வழங்கப்படாவிட்டால் வேறு மாற்று ஏற்பாடுகள் குறித்து சிந்திக்கவேண்டிவருமென்று அதில் குறிப்பிட்டுள்ளார் எனச் சில செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

கடந்த வாரம் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் சிலரை கிளிநொச்சியிலிருந்து திருகோணமலைக்கு ஹெலிகொப்டர் மூலம் அழைத்துச் செல்வது தொடர்பில் புலிகள் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்திருந்தது. இதனையடுத்தே புலிகள் இந்தக் காட்டமான கடிதத்தை அனுப்பிவைத்திருக்கின்றனர்.

இந்தக் கடிதம் கண்காணிப்புக் குழுவினருக்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள்களின் விலை அதிகரிப்பு!

கொழும்பு,ஜூன்6

எரிபொருள்களின் விலைகள் நேற்று நள்ளிரவில் இருந்து மீண்டும் அதிகரித்துள்ளன.

லீற்றருக்கு பெற்றோல் ஆறு ரூபாவாலும், டீசல் நான்கு ரூபாவாலும், மண்ணெண்ணெய் இரண்டு ரூபாவாலும் அதிகரித்துள்ளன என பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் ஜாலி மெதகம தெரிவித்தார்.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# திருமலையிலும் புலிகளின் விமானத்தளம் தேசிய புலனாய்வுத்துறை சந்தேகமாம்

கொழும்பு,ஜூன்6

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் விமானத்தளம் ஒன்று அமைவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படுவதாகத் தேசிய புலனாய்வுத்துறை, அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்துள்ள விசேட இரகசிய அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'சண்டே ரைம்ஸ்' பததிரிகை நேற்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

பிரபல இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸின் பாதுகாப்பு நிலைவரம் பற்றிய கட்டுரையில் இந்தத் தகவல் வெளியாகியிருக்கின்றது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

திருகோணமலை தெற்குப் பகுதியில் தரவடி என்னும் பிரதேசத்தில் 25 ஏக்கர் காணியைப் பற்றியும் பொதுமக்களின் நடமாட்டத்திற்கு அப்பகுதி தடைவிதிக்கப்பட்டதாக இருப்பது பற்றியும் கடந்தமாத இறுதியில் அரசிற்கு தேசிய புலனாய்வுச் சபை அறிக்கையொன்றைச் சமர்ப்பித்துள்ளது.

சம்பூர் பகுதியில் அமைந்துள்ள இந்த இடம் திருமலைத் துறைமுகத்தை நோக்கியதாகவும் அண்டியதாகவும் இருக்கின்றது. இந்தப் பகுதிக்கு ஏராளமான சிமெந்து மூடைகள் எடுத்துச்செல்லப்பட்டுள்ளன. இது புலிகள் இங்கும் விமானத் தளமொன்றை அமைப்பதற்கானதே என்று கருதப்படுவதாக தேசிய புலனாய்வுச் சபை அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இந்த விமானத்தளம் குறித்து பாதுகாப்பு அதிகாரிகள் இதுவரை ஊர்ஜிதம் செய்யவில்லை. ஆனாலும் இங்கு சுத்திகரிப்புப் பணிகள் இடம்பெறுகின்றன என விமானப்படையினர் ஊர்ஜிதப்படுத்தியுள்ளனர். ஆளில்லா உளவு விமானங்கள் மூலம் இவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வெடிவிபத்தில் ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,ஜூன்6

பாறை ஒன்றை வெடிவைத்து உடைப்பதற்கு முயற்சித்த குடும்பஸ்தர் அந்த வெடி திடீரென வெடித்துச் சிதறியதில் படுகாயமடைந்தார்.

ஆவரங்கால் பகுதியில் நேற்றுக்காலை 9 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான செல்லத்துரை மகேந்திரம் (வயது-26) என்வரே படுகாயமடைந்தவராவார்.

கல்லுடைத்து விற்பனை செய்யும் இவர் பெரிய பாறை ஒன்றை சிறு கற்களாக உடைப்பதற்காக வெடிமருந்தை வைத்து இறுக்கிய போதே அது வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஒ-15)

பொதுக்கட்டமைப்பு விவகாரம்

## கட்சிக்குள்ளேயே ஜனாதிபதிக்கு எதிர்ப்பு வலுக்கின்றதாகத் தகவல்

கொழும்பு,ஜூன்6

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்காகப் புலிகளுடன் சேர்ந்து பொதுக்கட்டமைப்பொன்றை அமைக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முயற்சி தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் அதிருப்தி கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான அதிருப்தியாளர்கள் கொண்ட குழுவில் ஜனாதிபதிக்கு மிக நெருக்கமானவர்கள் கூட இருக்கின்றார்கள் எனவும், ஆனால், இந்த அதிருப்தியை அவர்கள் பகிரங்கமாக வெளிக்காட்டத் தயங்குகிறார்கள் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உயர்மட்ட வட்டாரங்கள் நேற்று உதயனுக்குத் தெரிவித்தன.

இதேவேளை -

உத்தேசப் பொதுக்கட்டமைப்பிற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தொடர்பில் பிரதியமைச்சர்கள் கூட்டமைப்பு ஜனாதிபதியிடம் நேரில் முறைப்பாடு செய்யவுள்ளது என்றும் தெரிகின்றது.

அதேவேளை, பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவை உறுதிப்படுத்திக்கொள்ளும் வகையில் தமது கட்சியினருடன் முக்கிய பேச்சுகளை ஜனாதிபதி இவ்வாரம் நடத்தவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(க)

## கிளிவெட்டி பாரதிபுரம் பகுதியில் திடீரென மாயமான புத்தர் சிலை

### திருமலை நகரில் படை வாபஸ் இல்லை

திருகோணமலை,ஜூன்6

திருகோணமலை மாவட்டம் கிளிவெட்டி, பாரதிபுரத்தில் இருந்த புத்தர் சிலையை திடீரென காணவில்லையாம். கடந்த 3ஆம் திகதி இச்சிலை காணாமற்போனதாகத் தெரியவந்துள்ளது. அதன்பின்னர் அந்த இடத்தில் பிறிதொரு சிலை வைக்க எடுக்கப்பட்ட முயற்சி பின்பு கைவிடப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

அதேவேளை, அன்றையதினம் திருகோணமலை சிவன்கோவில் வீதியில் இருந்த அரச மரம் ஒன்றுக்கு தீயிடப்பட்டதாகவும், சிறிது நேரத்தில் அது அணைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இவற்றோடு ஆங்காங்கே இதுபோன்ற சிறு சிறு அசம்பாவிதங்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த வெள்ளியன்று ஹர்த்தாலின் பின்னரும் கூட திருமலை நகரத்திலிருந்து குவிக்கப்பட்ட துருப்புகள் வாபஸ் பெறப்பட்டனவாகத் தெரியவில்லை.

15ஆம் திகதிக்குப் பின்னர் மேலும் அசம்பாவிதங்கள் இடம்பெறலாம் என்ற ஊகத்தில் மேலும் படைக்குவிப்பு அங்கு இடம்பெறுவதாகவே உணரமுடிகின்றது. இராணுவத்தினர் நிரம்பிய பஸ்களை நகர்ப்பகுதியில் அதிகம் காணமுடிகின்றது.

கூட்டமைப்பு எம்.பிக்கள் சிலர் தொடர்ந்தும் திருகோணமலையில் தங்கியிருந்து நிலைமையை அவதானித்து வருகின்றனர்.


## ஆறுகண் மதகு பாலம் புனரமைப்பு

வரணி,ஜூன்6

குடத்தனை - வரணி பிரதான வீதியில் அமைந்துள்ள ஆறுகண் மதகுப் பாலம் தற்சமயம் திருத்தப்படுகின்றது. சுமார் 15 வருடங்களுக்கும் மேலாக இப்பாலம் பழுதடைந்து போக்குவரத்துக்கு பயன்படுத்த முடியாத அளவுக்கு சேதம் அடைந்திருந்தது.

மாரி காலங்களில் மழைவெள்ளம் இப்பாலத்தின் மேலால் பாய்வதனால் இப்பாலம் மிகமோசமாக சேதமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-170)





ஆனைக்கோட்டைப் பகுதியில் நேற்று முற்பகல் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞரின் சடலத்தையும், சம்பவ இடத்தில் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் விசாரணை மேற்கொள்வதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள் : பிரபா, நேசன்)*

## ஜனாதிபதி நேற்று நாடு திரும்பினார்

கொழும்பு,ஜூன்6

இந்தியாவிற்கு மூன்றுநாள் விஜயமொன்றை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று அதிகாலை நாடு திரும்பினார். அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்களும் ஜனாதிபதியுடன் இந்தியா சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதியின் இந்த விஜயம் மிகமிகத் திருப்திகரமான ஒன்றாக அமைந்ததென்று அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால நேற்றுத் தெரிவித்தார்.

(க)

## புகழேந்தியின் ஓவியக் கண்காட்சி நாளை முதல் யாழ். பல்கலையில்

யாழ்ப்பாணம்,ஜூன்6

யாழ்பல்கலைக்கழகத்தில் இன்றுமுதல் இடம்பெறவிருந்த தமிழக ஓவியர் புகழேந்தியின் 'புயலின் நிறங்கள்' ஓவியக் கண்காட்சி நாளை ஆரம்பமாகும் என்று சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை தெரிவித்துள்ளது.

வாழ்நாள் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்களின் இறுதி நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளதையடுத்தே இந்த ஓவியக் கண்காட்சி நாளை ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதன்படி கண்காட்சி நாளை செவ்வாய்க்கிழமையும் நாளைமறுதினம் புதன்கிழமையும் இடம்பெறும். முன்னதாக இக்கண்காட்சி இன்றும் நாளையும் இடம்பெறவிருந்தமை தெரிந்ததே.

(ஒ-12)

## ஆளுங்கட்சி நாடாளுமன்றக் குழுவை இன்று அவசர அவசரமாகக் கூட்டுகிறார் ஜனாதிபதி

இந்தியாவிலிருந்து நேற்று நாடுதிரும்பிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற தழுக் கூட்டத்தை அவசரமாகக் கூட்டுகிற...

ஜனாதிபதி மாளிகையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் ஜே.வி.பி. உறுப்பினர்களும கலந்துகொள்ளவிருக்கின்றனர். தமது இந்திய விஜயம் தொடர்பாகவும். உத்தேசப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான தமது அடுத்தகட்ட நடவடிக்கை குறித்தும் ஜனாதிபதி இந்தக் கூட்டத்தின்போது விளக்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உத்தேசப் பொதுக்கட்டமைப்பு யோசனைகளை நாடாளுமன்றத்திற்கு அறிவிப்பது தொடர்பான தமது தீர்மானத்தையும் ஜனாதிபதி இன்றைய கூட்டத்தின்போது அறிவிக்கவுள்ளார் என்று கூறப்பட்டது.

உத்தேசப் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் தெரிவிக்கப்படும் எதிர்ப்புகள் குறித்தும், அவ்வாறான எதிர்ப்புகளை முன்வைப்பவர்கள் இது விடயத்தில் கொண்டுள்ள மாற்றுத் திட்டம் என்ன என்பது குறித்தும் இன்றைய கூட்டத்தின்போது ஜனாதிபதி வினவுவாரென்றும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன

## திருமலை நகரசபை எல்லைக்குள் அனுமதிபெறாத 12 புத்தர் சிலைகள்

திருகோணமலை,ஜூன்6

திருகோணமலை நகராட்சி மன்ற எல்லைக்குள் 12 அனுமதி பெறப்படாத - சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட - விகாரைகள் இருக்கின்றன எனப் புள்ளி விவரமொன்று கூறுகின்றது.

திருகோணமலை பஸ்தரிப்பு நிலைய ஓட்டோ தரிப்பிடத்தில் திடீரென்று முளைத்த புத்தர் சிலையால் ஏற்பட்ட சர்ச்சைகளை அடுத்து சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட வழிபாட்டுத்தலங்கள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டன. இதன்படி 12 புத்தர் சிலைகளைக் கொண்ட பௌத்த விகாரைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடற்படைத் தளவாசல் முன்பாக, துறைமுகப் பொலீஸ் முன்பாக, மட்கோ சந்தியில் அபயபுரம் சுற்றுவட்டம் முன்பாக, அபயபுரம் சந்தி(பண்டாரநாயக்க மாவத்தை) - கோட்டை வீதி வாசிகசாலைக்கு முன்பாக, கோணேசர் வீதி, கோட்டை நுழைவாசல் முன்பாக, ஸ்ரீமாபுரம்(விஜயசேகரபுரம்), லவ்லேன், உப்புவெளி பொலீஸ் முன்பாக, மகிந்தபுரம் ஒழுங்கை, பிளான்டன் பொயின்ட் இராணுவ முகாம் முன்பாக ஆகிய இடங்களில் உள்ளவற்றுடன் சர்ச்சைக்குரிய பஸ்நிலைய புத்தர் சிலையையும் சேர்த்தால் இந்த எண்ணிக்கை 12 ஆகியுள்ளது. திருகோணமலை நகரசபை எல்லைக்குள் கணக்கில் எடுக்கப்படாத இன்னும் பல புத்தர் சிலைகள் உள்ளன என்றும் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. இது தவிர சட்டவிரோதக் கட்டடங்கள் தொடர்பில் எவ்வித நடவடிக்கை எடுக்கப்படாமை குறித்தும் அவை குறித்துக் கணக்கெடுக்கப்படாமை குறித்தும் நகரசபை மீது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேலும் திருகோணமலை மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று மக்கள் கோருகின்றனர்.

புள்ளிவிவரப்படி நகராட்சி மன்ற எல்லைக்குள் 5 கிறிஸ்தவ சிலைகளும் 5 இந்து ஆலயங்களும், ஒரு பள்ளிவாசலும் அனுமதியின்றி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் அவை காலங்காலமாக இருந்தவை என்றும் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு பின்னர் மீளப் புனரமைக்கப்பட்டவை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(க)

## திக்கம் வடிசாலை ஊழியரின் முறைப்பாடு குறித்து விசாரணை

### இன்று மனித உரிமை ஆணைக்குழுவில்

கரவெட்டி,ஜூன்6

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுவரும் திக்கம் வடிசாலை ஊழியர்களின் முறைப்பாடு தொடர்பான விசாரணை இன்று திங்கட்கிழமை யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவினரால் மேற்கொள்ளப்படவுள்ளது.

திக்கம் வடிசாலை ஊழியர்கள் கடந்த மாதம் 27ஆம் திகதி தொடக்கம் சம்பள உயர்வை வழங்கக் கோரி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களைப் பணி நீக்கம் செய்யும் பணிப்புரைக் கடிதம் ஊழியர்களின் முகவரிக்கு வடிசாலை பணிப்பாளர் சபையால் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

இந்த விடயம் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் ஊழியர்கள் முறையிட்டனர். அதனையடுத்து முதற்கட்ட விசாரணை நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக இன்றும் விசாரணை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-70-204)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## அரசுக் கூட்டமைப்புக்குள் பொதுக்கட்டமைப்பால் 'லடாய்'

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானத்துக்கான பொதுக்கட்டமைப்பு ஒன்றைப் புலிகளுடன் சேர்ந்து உருவாக்கப் போகிறேன் எனத் திரும்பத் திரும்ப வாய்ச் சவடால் அடித்து வரும் நாட்டின் தலைவி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அந்த வேலையை 'வெட்டு ஒன்று துண்டு இரண்டாக' செய்து முடிப்பதை விடுத்துப் பேசிப்பேசியே காலத்தை இழுத்தடித்து வருகின்றார். அதனால் இந்த விவகாரம் 'குரங்கின் கைப் புண்ணாக' மாறியிருக்கின்றது. குரங்கு தன் கையில் இருக்கும் புண்ணை ஆறவிடாமல் தானே அடிக்கடி அதைச் சொறிந்து சொறிந்தே புண்ணாக்குமாம். அது மாதிரி ஜனாதிபதியின் பொதுக்கட்டமைப்புத் திட்டமும் செயற்படுத்தப்படாமல் வாய்ப் பேச்சோடு இழுபடுவதால், அவரது ஆட்சிக் கூட்டமைப்புப் பங்காளிகளே அந்த விவகாரத்தைப் பகிரங்க மேடைகளில் சொறிந்து சொறிந்து -சீண்டிச் சீண்டி -பெரும் புண்ணாக்கி விட்டிருக்கின்றார்கள்.

இப்போது அந்தப் புண் பெரும் மோசமாகிவிட்டது. ஆழிப்பேரலை தாக்கிய கையோடே நோர்வே அனுசரணையாளர்கள் மூலம் புலிகளுடன் தொடர்புகொண்டு. காதும்காதும் வைத்தால்போல் விடயத்தைப் பேசி முடித்து, விவகாரத்தைத் தீர்த்திருந்தால் இந்தளவு பூதாகாரப் பிரச்சினையாகப் பொதுக்கட்டமைப்பு விஸ்வரூபம் எடுத்திருக்காது. காலத்தை இழுத்தடிக்கும் ஜனாதிபதியின் வாய்ச்சவடால் பேச்சு இப்போது பொதுக்கட்டமைப்பை பெரும் கேள்விக்குள்ளாக்கி, அதை ஏற்படுத்துவதையே மோசமான சிக்கலாக்கியிருக்கின்றது.

இதுவரை அரசுக்குள், ஜனாதிபதியின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பியிடமிருந்துதான் எதிர்ப்பு வருகின்றது என்று பார்த்தால் இப்போது ஜனாதிபதி சந்திரிகாவின் உள்வீட்டுக்குள் இருந்தே எதிர்ப்புக் கிளம்பத் தொடங்கிவிட்டதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. ஜனாதிபதிக்கு மிக நெருக்கமானவர்களே - அவரது சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களே - இது விடயத்தில் ஜனாதிபதியின் காலை வாரத் தயாராகிவிட்டார்கள் போலதென்படுகின்றது.

ஜனாதிபதியின் வலது கரமாக விளங்கிவரும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீர 'பொதுக்கட்டமைப்பு ஏற்பட்டால் அரசை விட்டு ஜே.வி.பி. வெளியேறும் என்கின்றது. அப்படி அது வெளியேறினால் அரசே கவிழ்ந்துவிடும். எனவே, அரசைக் கவிழ்க்கும் பொதுக்கட்டமைப்பு ஏற்பாட்டை நாம் செய்யத்தான் வேண்டுமா? இது குறித்து ஆற, அமர சிந்தித்து ஒரு முடிவுக்கு வருவது நல்லது' - என்ற சாரப்பட இதுவிடயத்தில் பின்னடிப்புக் கருத்துகளை வெளியிடுகின்றார்.

இவ்விவகாரத்தில் இதையும்விட மோசமான நிலைக்குச் சென்றுவிட்டார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ என்பது போலப்படுகின்றது.

இதுவரை காலமும் தம்மை இனவாதிகளுடன் சேர்ந்தவர் அல்லர் என்பதுபோல காட்டிவந்தவர் பிரதமர் மஹிந்த. அதன்மூலம் சிறுபான்மை இனத்தவர்கள் மத்தியிலும் அவருக்கு வரவேற்பு இருந்தது.

ஆனால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கண் வைத்திருக்கும் அவர், அதற்காகத் தமது நிலைப்பாட்டிலிருந்து குத்துக்கரணம் அடிக்கவும் தயாராகிவிட்டார் என்கின்றன சம்பந்தப்பட்ட வட்டாரங்கள்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் கட்சி வேட்பாளராகத் தாம் தெரிவுசெய்யப்படுவதற்கும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் வெல்வதற்கும் ஜே.வி.பியினரின் ஆதரவும் அனுசரணையும் தமக்குக் கட்டாயம் தேவை என்று கருதும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அதனைப் பெறுவதற்காக ஜே.வி.பியைத் தம் பக்கம் வளைத்துப் போடும் நடவடிக்கைக்குப் பொதுக்கட்டமைப்பைச் சரியான ஆயுதமாகப் பயன்படுத்தத் திட்டமிடுகிறார்.

பொதுக்கட்டமைப்பு ஏற்பாட்டைத் தாமும் மும்முரமாக எதிர்த்தால் ஜே.வி.பியினர் ஆளும் கூட்டமைப்பில் தமது பக்கம் சாய்ந்து விடுவார்கள் என்பது பிரதமர் மஹிநதவின் கருத்துப் போலும்.

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதில் முனைப்பாக இருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குறித்துக் கடும் சூடான நிலைப்பாட்டில் உள்ள ஜே.வி.பியும் இது விடயத்தில் சந்திரிகாவுக்கு நல்ல பதிலடி கொடுக்கத் திட்டமிடுகின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் அடுத்த முன்னணித் தலைவர்' என்ற அந்தஸ்த்தில் விளங்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தமது கட்சிக்குள்ளேயே ஜனாதிபதிக்கு விரோதமான நிலைப்பாட்டை எடுக்கும்போது, அரசுக் கூட்டமைப்புக்குள் பிரதமரது கையைப் பலப்படுத்துவதன் மூலம் ஜனாதிபதிக்கு நல்ல அடியைக் கொடுக்கலாம் என ஜே.வி.பி. திட்டமிடுகின்றது.

ஜே.வி.பியைத் தமது கைக்குள் போடுவதற்காக- அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக - பிரதமர் மஹிநதவும் பொதுக்கட்டமைப்பு எதிர்ப்புப் புராணத்தை ஆரம்பித்துவிட்டார்.

ஜனாதிபதியின் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மேலும் பல தலைவர்கள் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக முணுமுணுக்கத் தொடங்கிவிட்டார்கள் என்பதும் துலாம்பரமாகிவருகின்றது.

இப்படி உள்வீட்டு எதிர்ப்பாலேயே, பொதுக்கட்டமைப்பு ஏற்பட முன்னரே கூட்டமைப்பு அரசு குலைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டம்: பயனாளிகளின் விவரம் பார்வைக்கு!

உலக வங்கியின் உதவியுடன் யாழ். மாவட்டத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டத்திற்குத் தெரிவான பயனாளிகளின் பெயர் விபரங்கள் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில உள்ள 14 பிரதேச செயலாளர் அலுவலகங்களிலும் மற்றும் கிராம அலுவலர் அலுவலகங்களிலும் பொது இடங்களிலும் மேற்படி விவரங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் நிதியுதவியுடன் அமுல்படுத்தப்படவுள்ள வடக்கு - கிழக்கு வீடமைப்புப் புனர்வாழ்வுத் திட்டத்தின்கீழ் முதல்கட்டமாக இவ்வாண்டு யாழ்.மாவட்டத்தில் ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதற்கென குடாநாட்டில் உள்ள 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கிராம ரீதியாகப் புனர்வாழ்வுக் குழுக்கள் நியமிக்கப்பட்டு வீட்டுச் சேதமதிப்பீட்டுப் படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டதன் அடிப்படையில் பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் விவரங்களே இவ்வாறு பொது இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன என்றும் -

மேற்படி பயனாளிகளின் தெரிவுதொடர்பாக முறைப்பாடுகள் இருப்பின் அவை குறித்த விவரங்களைத் தத்தமது பிரதேச செயலாளர் அலுவலகங்களில் சமர்ப்பிக்க முடியும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.(எ)

# வீதி விபத்துகளைத் தடுக்கும் நடவடிக்கைகளில் உள்ளூராட்சி மன்றங்களும் இணைந்து கொள்ளும்

## பிராந்திய உதவி ஆணையாளர் சுற்றறிக்கை மூலம் அறிவிப்பு

சாவகச்சேரி, ஜூன் 6

குடாநாட்டில் அதிகரித்துவரும் வீதி விபத்துகளைத் தடுக்கும் வகையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களும் நடவடிக்கை எடுக்கவுள்ளன.

யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இதுவிடயமாக சுற்றறிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இதுவிடயமாகப் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ வீதிகளின் இரு பக்கங்களிலும் நடைபாதைக்கான தடைகளை அகற்றுதல். முக்கியமாக பொதுச் சந்தைகளுக்கு முன்பாக உள்ள வீதிகளில் கடைத்தொகுதிகளின் முன்பாக மக்களின் நடைபாதைகள் வியாபாரப் பொருள்களினால் தடைசெய்யப்பட்டுள்ளன. இதனால், பொதுமக்கள் வீதிகளின் நடுவே பயணம் மேற்கொள்ளவேண்டியுள்ளது.

★ போக்குவரத்துக் குறியீடுகளை மறைக்கும் விளம்பரங்களை அகற்றுவதுடன் அவற்றுக்கான அனுமதியை இரத்துச் செய்தல்.

★ போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கக்கூடியவாறு தனிப்பட்டவர்களால் வீதியோரங்களில் பறிக்கப்படும் கற்கள், மணல்கள் ஆகியவை அந்த இடங்களில் நிரந்தரமாக இருப்புக்கொள்ளவிடாது தடைசெய்தல்.

★ கட்டாக்காலியாகத் தெருக்களில் திரியும் நாய்களை அழிப்பதற்கு முழுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். கட்டாக்காலி நாய்கள் வீதிகளில் நடமாடாமல் செய்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

★ பிரதான சந்திகளில் வாகனங்களுக்குப் பொருத்தமான தரிப்பிடங்களை ஒழுங்கு செய்தல் என்று அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பான மேலதிக உதவிகளுக்கு யாழ்.மாவட்டத்திலுள்ள பொலீஸ் திணைக்களத்தின் உதவிகளையும் பெற்றுக்கொள்ளலாம் என்றும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுற்றறிக்கையில் அறிவித்துள்ளார். (எ-31)

# தெல்லிப்பழையில் கதிர்வீச்சுக் கருவி பொருத்தும் பணிகள் விரைவில் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஜூன்6

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் கதிர்வீச்சு சிகிச்சை வழங்கும் இயந்திரம் பொருத்தும் பணிகள் இடம்பெற்றுவருகின்றன என யாழ் மாவட்ட சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கதிர்வீச்சு இயந்திரம் பொருத்தும் பணிகள் ஓரிரு தினங்களில் முடிவடையும் நிலையில் உள்ளது. இப்பணிகள் பூர்த்தியடைந்ததும் நோயாளர்களுக்கான சிகிச்சைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கதிர்வீச்சு சிகிச்சை தேவை என அறிவிக்கப்பட்ட நோயாளர்கள் யாழ்.போதனா வைத்தியசாலை 26ஆம் விடுதியில் புற்றுநோய்ச் சிகிச்சை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர் ஜெ.ஜெயக்குமாரை உடனடியாகச் சந்தித்துப் பதிவுகளை மேற்கொள்ளவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-204)



கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனியின் யாழ். மாவட்டக் கிளையின் திறப்பு விழா நேற்றுமுன்தினம் யாழ்.கஸ்தூரியார் வீதியில் உள்ள கட்டடம் ஒன்றில் திறந்துவைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இலங்கைக் காப்புறுதிக் கம்பனித் தலைவர் ரெமனல் சமரசிங்க நாடாவை வெட்டித் திறந்துவைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்: பிரபா)*

# கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனியின் மாவட்டக் கிளை அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஜூன்6

கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனியின் யாழ்.மாவட்டக் கிளை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்.கஸ்தூரியார் வீதியில் கட்டடம் ஒன்றில் திறந்துவைக்கப்பட்டது.

முன்னதாக, பிரதம விருந்தினர் சிறப்பு விருந்தினர்கள் திறப்புவிழா கட்டடப் பகுதிக்கு அழைத்துவரப்பட்டனர்.

இலங்கை கூட்டுறவுக் காப்புறுதிக் கமபனித் தலைவர் ரெமனல் சமரசிங்க நாடாவை வெட்டி கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

மங்கள விளக்கினை யாழ்.மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் எஸ்.கனகசபாபதி, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.சிவலிங்கம், கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம், கடற்றொழில் சம்மேளனங்களின் சமாசத் தலைவர் சி.தவரட்ணம், மக்கள் வங்கியின் உதவி முகாமையாளர் குகதாசன் உள்ளிட்ட பலர் ஏற்றிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் இலங்கை கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனியின் தலைவர் ரெமனல் சமரசிங்க உட்படப் பலர் உரையாற்றினர்.

இந்த நிகழ்வில் வாடிக்கையாளர்கள், காப்புறுதிக் கம்பனியின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-7-ரி)

### நாளை

*வைகாசி 24*
*செவ்வாய்க்கிழமை*
*07.06.2005*
திதி : *பிரதமை*
*பின்னிரவு 04.44 வரை*
நட்சத்திரம் : *மிருகசீரிடம்*
*முழுவதும்*
*சுபநேரம் : 10.22 - 11.52*
*ராகுகாலம்: 02.52 - 04.22*
*(யாவும் பழைய நேரப்படி)*

# நெடுந்தீவில் மீண்டும் கூட்டுப்பிரார்த்தனை

நல்லூர், ஜூன்6

நெடுந்தீவு மேற்கு, நெழுவினி விநாயகர் ஆலயத்தில் மீண்டும் வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்று வருகிறது.

கடந்த சில மாதங்களாக தவிர்க்க முடியாத காரணங்களினால் தடைப்பட்ட கூட்டுப் பிரார்த்தனை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் -

சைவ அபிமானிகள் கூட்டுப்பிரார்த்தனை வழிபாடுகளைத் தொடர்ந்து நடத்துவதற்கான ஒத்துழைப்புகளை வழங்கி உதவ வேண்டும் என்று ஆலய பரிபாலனசபையின் தலைவர் இ.கந்தையா கேட்டுள்ளார். (எ-111)

### உதயவாக்கு

தான் வாழ்வதற்கே உலகம் என்று எண்ணுபவர்கள் உலகம் வாழ்வதற்கும் உதவ முனைய வேண்டும்.

- டெனிக்ஸான்.



உரும்பிராயில் நேற்றுக்காலை நடந்த தியாகி பொன்.சிவகுமாரனின் 31 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் பொதுச்சுடரினை யாழ். மாவட்டத் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றுவதையும் ஈகச்சுடரினை சிவகுமாரனின் தாயார் திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரை ஏற்றுவதையும் அருகில் கோப்பாய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்பருத்தி நிற்பதையும் திருவுருவச் சிலைக்கு லண்டனில் இருந்து வருகைதந்த பொன்.சிவசுப்பிரமணியம் மலர்மாலை அணிவிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள்:நேசன்)*

# பொன்.சிவகுமாரனின் 31ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஜூன்6

தியாகி பொன்.சிவகுமாரனின் 31ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வுகள் நேற்றுக்காலை உரும்பிராய் சந்தியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் கோப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் ந.சிவகடாட்சம் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில், பொதுச்சுடரினை யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றிவைத்தார்.

ஈகச்சுடரினை சிவகுமாரனின் தாயார் திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரை ஏற்றி வைக்க திருவுருவச் சிலைக்கான மலர் மாலையை சகோதரர் பொன்.சிவசுப்பிரமணியம் அணிவித்தார்.

தொடர்ந்து மலரஞ்சலி இடம்பெற்றது. போராளிகளும், பொதுமக்களும் மலரஞ்சலி செலுத்தினர்.

சிவகுமாரனின் நினைவுரையை வசாவிளான் மத்திய மகாவித்தியாலய முன்னாள் அதிபர் ஆ.நடராசாவும் சிறப்புரையை கோப்பாய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்பருத்தியும் நிகழ்த்தினர். (எ-86)


## 04.06.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300313520 இலிருந்து 300330585 வரை

சீட்டிழுப்பு இல. 1612

**07 15 41 68** சுப்பர் எண் **10**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.93,62,300/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 96,62,300/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 29 | 5,000/- | 1,45,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 463 | 1,000/- | 4,63,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,486 | 500/- | 7,43,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 22,096 | 40/- | 8,83,840/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 20,853 | 20/- | 4,17,060/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,14,571 | 10/- | 31,45,710/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ. 72,97,610/-

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 1,02,02,700/-

தொடர் இல. 200349335 க்கு மேற்பட்ட நீலம் நிற டிக்கட்டுக்கள் 2005 ஜூன் 08 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் சைக்கிள் அடங்கிய பரிசு முறியை வென்றெடுத்த 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

300328663-1-72
300314736-6-44
300317024-3-17
300330123-9-90
300319639-4-88

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


## குருநகரில் மாலை நேர மீட்டல் வகுப்பு

குருநகர் தொடர்மாடி சனசமூக நிலையத்தில் மாணவர்களுக்கான மாலை நேர வகுப்புக்களும் மீட்டல் வகுப்புக்களும் நடைபெற்று வருகின்றன என இந்த நிலையத்தின் தலைவர் அ.க.ஏனெஸ்ற் தெரிவித்தார்.

ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு 11 வரை கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கான மாலை நேர வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும் - கூறப்பட்டது. (எ-51)


உ

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் பார்த்திப வருடம் வைகாசித் திங்கள் 16ஆம் நாள் (30-05-2005) திங்கட்கிழமை சிவபதமடைந்த

**ப்ரம்மஸ்ரீ கந்ததாஸ ஐயர் சண்முகநாதக் குருக்கள்** அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

தசாகம்: **வைகாசி 25ஆம் நாள் 08-06-2005 புதன்கிழமை காலை 10 மணி**
ஏகோதிஷ்டம், மாசியம்: **வைகாசி 26ஆம் நாள் 09-06-2005 வியாழக்கிழமை**
சபிண்டீகரணம்: **வைகாசி 27ஆம் நாள் 10-06-2005 வெள்ளிக்கிழமை**
மேற்படி கிரியைகளிலும்
கிருஹயக்ஞம்: **வைகாசி 29ஆம் நாள் 12-06-2005 ஞாயிற்றுக்கிழமை**

நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*134, பாற்பண்ணை வீதி,*
*திருநெல்வேலி.*

(36224) (24-14-13)

**- குடும்பத்தினர்.**

## மனமுவந்து வாழ்த்துகின்றேன்



எமது மண்ணில் பொதுப்பணிகள், வைத்தியசேவை, சமூகப்பணிகள் கல்விப் பணிகள் முதலியவற்றை ஆற்றிவரும் "கருமத்திருதி"

**உயர்திரு. வை.தியாகராஜா** ஜே.பி. அவர்கள்

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியை ஆரம்பிப்பதில் ஆர்வங்காட்டி எமது அன்புக்கும் நட்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமாகி பட்டம் பெற்றுள்ளார். அன்னாரை பெருமகிழ்ச்சியுடன் வாழ்த்தி அவரது சேவை நல்ல முறையில் தொடர எல்லாம்வல்ல ஆதிபராசக்தி மீனாட்சி அம்மனை வேண்டிப் பிரார்த்தித்து உளம் மகிழ்ந்து இறும்பூதெய்திப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

லயன் K.செல்வரத்தினம் J.P.
அச்சுவேலி தெற்கு
- உபதலைவர் -
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், கோப்பாய்.

(36229) (24-14-13)

## தகவல் தரவும்

யாழ். திருநெல்வேலியைச் சேர்ந்த செல்வி சிவநேசன் யசிந்தா என்பவருடைய வெளிநாட்டு ஆவணங்கள் அடங்கிய கோவை (FILE) ஒன்று யாழ்ப்பாணத்தில் தபாற்பெட்டிச் சந்திக்கும் நாவலர் வீதிக்கும் இடையில் ஓட்டோ பயணத்தின்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க் காணும் முகவரிக்குத் தகவல் தரவும்.

**எஸ்.பத்மநாதன்**
26, பாண்டியன்தாழ்வு,
சந்தனமாதா கோயிலடி, சுண்டுக்குளி.

(36230) (24-14-13)

## மரண அறிவித்தல்

### நாகர் இராசையா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட நாகர் இராசையா அவர்கள் 04-06-2005 சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகர் - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் இராசம்மா, செல்லம்மா, தம்பிராசா, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் பூமணியின் அன்புக் கணவரும் றூபராஜேஸ்வரன், இலங்கேஸ்வரன், சுதாயினி, சுபாஜினி, பிரதீப் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுமதினி, பிரதீபன் ஆகியோரின் அருமை மாமனும் ஜனார்த்தன் அவர்களின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06-06-2005) திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பாரதி ஒழுங்கை,*
*செம்மணி வீதி,*
*நாயன்மார்கட்டு.*

தகவல்:
றூபன் (மகன்).

(36229) (24)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் : 15.03.1952

மறைவு : 07.05.2005



2005 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 7 ஆம் திகதி அமரத்துவம் எய்திய எமது குடும்பத்தலைவர் சரவணமுத்து வினாயகமூர்த்தி அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (06.06.2005) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அதைத்தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

### அமரர் சரவணமுத்து வினாயகமூர்த்தி

கேணியடி வீதி,
மீசாலை மேற்கு,
மீசாலை.

(36216)(51-)

குடும்பத்தினர்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையீடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபல்யமானவர்.

*சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:*

**வேலணை வைத்திய கலாநிதி சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 222 2459

(36228) (14-18-28)

# அரச கட்டுப்பாட்டில் தமிழ் மாணவரின் கல்விக்கு இராணுவம் முட்டுக்கட்டை

## முல்லை. மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் உரை

முல்லைத்தீவு,ஜூன்6

அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற தமிழ் மாணவர்கள் இராணுவ நெருக்குவாரங்கள், முட்டுக்கட்டைகளுக்கு மத்தியிலேயே கல்வியைத் தொடங்குகின்றனர். தமிழ் மாணவர்களின் கல்விக்கு இராணுவம் பெரும் முட்டுக்கட்டையாக இருந்துவருகிறது.

-இவ்வாறு தெரிவித்தார் முல்லைத்தீவு மாவட்டத் தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் நிஷால்டின்.

முல்லை. மாவட்ட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மாணவர் எழுச்சிநாள் நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர் சமுதாயத்தின் மீது சிறிலங்கா படையினரால் மேற்கொள்ளப்படும் அராஜக நடவடிக்கைகளை மாணவர்களின் எழுச்சி மூலம்தான் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் காட்டமுடியும்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் குறிப்பாக வன்னி நிலப்பரப்பில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் எவ்வித அச்சமும் நெருக்கடிகளும் இன்றி சுதந்திரமான முறையில் இடம்பெற்றுவருகின்றன.

ஆனால், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளைச் சுதந்திரமான முறையில் முன்னெடுக்க முடியாது நாளாந்தம் ஏதோவகையில் இராணுவ நெருக்கடிகளைச் சந்தித்த வண்ணமே உள்ளனர்.

மாணவர்களாகிய எமக்குப் பல்வேறுபட்ட பிரச்சினைகள் உள்ளன. அவற்றைத் தீர்ப்பதில் அரசு பாராமுகம்காட்டி வருகிறது. போராட்டங்களில் எத்தகைய நெருக்கடிகள், சோதனைகளை நாம் எதிர்நோக்கினோமோ அதேநிலை தான் இந்தச் சமாதான சூழ்நிலையிலும் தொடர்ந்த வண்ணமுள்ளது.

எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலுள்ள மாணவர்களை ஒழுங்குபடுத்தி ஒரு கட்டமைப்பை உருவாக்கி அவர்களுடைய எதிர்கால வளர்ச்சி கருதி எமது தேசியத் தலைவர் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறார். இதனைப் பல நிறுவனங்கள் பாராட்டியும் உள்ளன.

எமக்கு எதிராக இராணுவ ஆக்கிரமிப்பாளர்களால் பல கொடூரங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. அவற்றை இந்த மாணவர் எழுச்சி மூலம்தான் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் கூறமுடியும். அதற்காகவே நாம் அனைவரும் இங்கு ஒன்று கூடியுள்ளோம். இந்த எழுச்சியைச் சர்வதேசம் ஏற்று எமக்குச் சுதந்திரமான, கௌரவமான தீர்வொன்றைப் பெற்றுத் தருவதற்கு முன்வரவேண்டும் - என்றார்.

புதுக்குடியிருப்புப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் பிறையாளன் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

எமக்கும் அரசிற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட சமாதான உடன்படிக்கை ஏற்பட்டு மூன்றாண்டு காலமாகியும் பாடசாலைகள் முழுமையாக இயங்கமுடியவில்லை. அதுமட்டுமல்லாது, மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் எவ்விதமான நன்மைகளும் கிடைக்கவில்லை. அதற்கு மாறாக தமிழ் மக்களையும் போராளிகளையும் கொன்றொழிக்கும் நடவடிக்கையிலேயே அரசும் இராணுவமும் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றன. இந்த நிலைமையைத் தொடர்ந்தும் நீடிக்கவிடமுடியாது.

சமாதான காலத்தில் எமக்கு ஆத்திரம் ஊட்டக்கூடிய பல சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றபோதும் எமது தலைமைப்பீடம் பொறுமை காத்து வருகின்றது. அந்தப் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு. தொடர்ந்தும் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கமுடியாது. எமது மக்களின் நலன்கருதி அடுத்த வழியைத்தேட வேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் - என்றார். (த-410)

# அம்பலப்பெருமாள் சந்தியில் வீதித்தடையால் விபத்து

அம்பலப்பெருமாள் சந்தியில் இருந்து வன்னேரிப் பக்கமாக திரும்பும் இடத்தில் வீதியின் குறுக்கே போடப்பட்டுள்ள வேகத்தடையால் விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு முன்னறிவித்தலும் இன்றி இப்படிப் போடப்படுகின்ற வேகத்தடைகளால் பயணிகள் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

அங்கு வேகத்தடை தேவையாயின் உரிய அதிகாரிகள் அதனைப் பார்வையிட்டு உரிய முறையில் வேகத்தடையை அமைப்பதற்கு ஆவனசெய்வதன் மூலம் தற்போது நாளுக்கு நாள் அங்கே ஏற்படுகின்ற விபத்துக்களை உடனடியாகத் தவிர்க்கலாம் என்றும் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.


(த-415)

# ஊரக வளர்ச்சிப் பிரிவால் கோழிகள் அன்பளிப்பு

கிளிநொச்சி,ஜூன்6

வன்னி 'ரெக்' நிறுவனத்தின் அனுசரணையுடன் ஊரக வளர்ச்சிப் பணியினரால் அண்மையில் கிருஷ்ணபுரம் கிராமத்தில் 10 கோழிகள் வீதம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு ஊரக வளர்ச்சிப் பணி நடுவப் பணியகத்தில் கிருஷ்ணபுரம் ஊரகவளர்ச்சி பொறுப்பாளர் முபரந்தாமன் தலைமையில் நடைபெற்றது. இதில் கிளி.மாவட்ட ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் ஈழவன் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு கோழிகளை வழங்கினார். (த)



கடந்த கால யுத்தத்தினால் மிகவும் சேதமடைந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஒட்டுசுட்டான் சமளந்துளாய் பிள்ளையார் ஆலயம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது. அந்த ஆலயத்தின் முகப்புத் தோற்றத்தைப் படத்தில் காணலாம். *(படம்: ஒட்டுசுட்டான் செய்தியாளர்)*

# ஒட்டுசுட்டானுக்கு மின் வழங்க அரச அதிபரிடம் கோரிக்கை

ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு மின்சார வசதியை ஏற்படுத்தித் தருமாறு அப்பிரதேச மக்கள் மாவட்ட அரச அதிபரைக் கேட்டுள்ளனர்.

முல்லைத்தீவு, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு போன்ற பகுதிகளில் மின்சார வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அங்கு மக்கள் பல தொழில்களை மேற்கொண்டு வருகின்றனர். அதேபோன்று இப்பிரதேச மக்களும் மின்சாரத்தின் மூலம் ளிபொருளை மீதப்படுத்துவதுடன் பல்வேறு தொழில்களை மேற்கொண்டு பயனடைவதற்கு ஏதுவாக மின்சார வசதியை ஏற்படுத்தித் தருமாறு கோரப்பட்டுள்ளது.

உழவு இயந்திரம், நீரிறைக்கும் இயந்திரம் போன்றவற்றிற்கான வேலைகளை மேற்கொள்ள இப்பகுதிமக்கள் கிளிநொச்சி, வவுனியா வரை செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கும் மின்சாரம் வழங்க ஆவன செய்து அதன்மூலம் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க உதவ வேண்டும் என்றும் மக்கள் கேட்டுள்ளனர். (த-341)




# மீனவர் சமாசத்துக்கு குளிரூட்டி வாகனங்கள்

## 'ஒக்ஸ்பாம்' நிறுவனம் வழங்கியது

திருவையாறு,ஜூன்6

'சுனாமி' அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பிரதேச மீனவ மக்களின் மீன்பிடித்தொழிலை ஊக்குவித்து, பிடிக்கப்படுகின்ற மீன்களுக்கு அதிகளவு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்குடன் குளிரூட்டப்பட்ட இரண்டு வாகனங்கள் வடமராட்சி கிழக்கு மீனவ சங்கங்களின் சமாசத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனங்களைக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் சமாச மண்டபத்தில் இடம்பெற்றதுடன், அரசியல்துறையினர், 'ஒக்ஸ்பாம்' பிரதிநிதிகள், அனர்த்தச் செயலணி அங்கத்தவர்கள், மீனவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இந்த அன்பளிப்பினால் மக்கள் பாதிப்பிலிருந்து விடுபட்டு தமது ஜீவனோபாயத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்று 'ஒக்ஸ்பாம்' நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், 'ஒக்ஸ்பாம்' நிறுவனம் மேலும் 40 படகுகளையும் இயந்திரங்களையும் இந்த மீனவர்களுக்கு வழங்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(த-393)



'ஒக்ஸ்பாம்' நிறுவன நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் மாட்டின் லிண்டர்ஸ், வடமராட்சி கிழக்கு மீனவர் சங்க சமாசத் தலைவர் மு.தங்கவேலுவிடம் வாகனச்சாவியையும் ஆவணத்தையும் கையளிப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: திருவையாறு செய்தியாளர்)*

# ஜி.சீ.ஈ. சாதாரண மாணவருக்கு விசேட ஆங்கில வகுப்புகள்

## முல்லைத்தீவு தமிழ்ச் சங்கம் ஏற்பாடு

முல்லைத்தீவு, ஜூன்6

ஜி.சீ.ஈ.சாதாரண பரீட்சையில் ஆங்கில பாடத்தில் திறமை மற்றும் விசேட சித்திகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான விசேட ஆங்கில வகுப்புகள் முல்லை. மாவட்டத்தில் நடைபெறவுள்ளன.

முல்லை. மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் முள்ளியவளையிலும் புதுக்குடியிருப்பிலும் இவ்வகுப்புகள் நடைபெறவுள்ளன. பிரதி சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை இவ்வகுப்புகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 18 ஆம் திகதி முள்ளியவளையில் - கலைமகள் வித்தியாலயத்திலும் 19.ஆம் திகதி புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்திலும் காலை 9 மணிக்கு இந்த வகுப்பின் ஆரம்ப நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

ஜி.சீ.ஈ.பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி பெற்று எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள பரீட்சையில் ஆங்கில பாடத்திற்குத் தோற்றுவதற்கு விண்ணப்பித்தவர்கள் மட்டும் இவ்வகுப்புக்கு அனுமதிக்கப்படுவர் என்றும் -

ஒவ்வொரு இடங்களிலும் தலா 30 மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் என்றும் - முல்லை. மாவட்ட தமிழ்ச் சங்கச் செயலாளர் க.ஜெயவீரசிங்கம் அறிவித்துள்ளார்.

(த-410)

# புதூர் நாகதம்பிரான் ஆலய பொங்கல் பெருவிழா இன்று

புளியங்குளம்,ஜூன்6

வவுனியா வடக்கு, புதூர் ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் பெருவிழா இன்று நடைபெறவுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு புண்ணியாகவாசனம், வாஸ்துசாந்தி, கடங்தாபனம், யாகபிரவேசனம், யாதுகை, அன்னிகார்ஜம், விசேடதீபாராதனை என்பவற்றுடன் திருவிழா ஆரம்பமானது.

23 ஆம் திகதி கும்பாபிஷேக தின சகஸ்ர சங்காபிஷேகமும் நடைபெற்றது.

கடந்த முதலாம் திகதி எண்ணெய்க்காப்பும் 2 ஆம் திகதி விநாயகப் பெருமானுக்கு கும்பாபிஷேகமும் விசேட பூஜையும் நடைபெற்றன.

மேற்படி ஆலயத்தில் இன்று நடைபெறும் பொங்கல் பெருவிழாவுக்கு வருகைதரும் பக்தர்களுக்குப் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. அடியார்களுக்கு அன்னதானம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-355)



# மருதங்கேணி மற்றும் அனலைதீவில் சுழற்சி முறையில் மருத்துவர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூன்6

மருதங்கேணி மற்றும் அனலைதீவு அரசினர் வைத்தியசாலைகளில் இம்மாதத்திலிருந்து சுழற்சி முறையில் கடமையாற்றுவதற்கு மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் பதிவுபெற்ற வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.கமலநாதன் மருதங்கேணி அரசினர் வைத்தியசாலைக்கும், அளவெட்டி மத்திய மருந்தகப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றும் டாக்டர் திருமதி பூ.சிவயோகநாதன் அனலைதீவு அரசினர் வைத்தியசாலைக்கும் யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரினால் சுழற்சி முறைத் திட்டத்தின் கீழ் கடந்த முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு மாதச் சம்பளத்துடன் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக தலா 10ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும். அத்துடன், ஸ்தாபனக் கோவைக்கு அமைவாக இதர கொடுப்பனவுகளும் கிடைக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. அரசசார்பற்ற உதவி வழங்கும் நிறுவனம் ஒன்றே இந்த 10 ஆயிரம் ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்க முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-135)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 684 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு |
| திகதி | 03-6-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. 5460348-5475467 |

லக்கினம் கடகம்

வெற்றி இலக்கங்கள்

37 45 52 53

ஜக்பொட் பரிசு ரூபா.17,37,650/- வெல்லப்பட்டுள்ளது

இந்த செவ்வாய்க்கிழமை ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,33,029 | 10/- | 33,30,290/- |
| 2.இலக்கங்கள் | 30,587 | 20/- | 6,11,740/- |
| 1.இல லக்கினம் | 30,180 | 30/- | 9,05,400/- |
| 2.இல லக்கினம் | 2,822 | 100/- | 2,82,200/- |
| 3.இலக்கங்கள் | 817 | 500/- | 4,08,500/- |
| 3.இல லக்கினம் | 74 | 5,000/- | 3,70,000/- |
| 4.இலக்கங்கள் | 02 | 1,00,000/- | 2,00,000/- |
| 4.இலக்கங்கள் | 01 | 17,37,650/- | 17,37,650/- |
| மொத்தம் | 3,97,517 | - | 88,98,030/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 88,98,030/- தொடர் இல. 4521437 க்கு மேற்பட்ட நீலம் நிற டிக்கட்டுக்கள் 2005 மே 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5471299-7-89
5466782-7-93
5469612-7-43
5475285-8-60
5465500-3-84


## சித்த வைத்தியசாலையில் நோயாளர் அதிகரிப்பு

வலி.தென்மேற்கு, ஜூன்6

வலி.தென்மேற்கு பிரதேச சபையினால் கடந்த மார்ச் மாதத்தில் புதிதாகத் திறக்கபபட்டுள்ள இலவச சித்த ஆயுர்வேத வைத்திய சாலையில் சிகிச்சைபெறவரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

கடந்த மே மாதத்தில் மட்டும் இவ்வைத்திய சாலையில் இரண்டாயிரத்து 462 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

சில்லாலை, மாதகல், பண்டத்தரிப்பு, பிரான பற்று, வடலியடைப்பு, விளான் ஆகிய இடங்களைச் சேர்ந்த நோயாளர்கள் இங்கு சிகிசசை பெற்றுவருகின்றனர்.

(3-135)

## மன்னம்பிட்டியில் இளைஞர் படுகொலை!

கொழும்பு,ஜூன்6

பொலன்நறுவ மாவட்டம் மன்னம்பிட்டியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7.40 மணியளவில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அதேயிடத்தைச் சேர்ந்த சிவசாமி சிவகுமார் (வயது 27) என்ற இளைஞரே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் உறுப்பினராக இருந்த இவர் கடந்த ஒருவருடத்துக்கு முன்னர் அதில் இருந்து விலகினார் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

கருணா தரப்பினர் இக்கொலையைச் செய்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

(ஒ-3)


## 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வீரப்பிறப்பு 23 - 04 - 1966



வீரமரணம் 06 - 06 - 1987

லெப்டினன் பவான்

(கந்தையா நவநிதி)

தானைத் தலைவன் வழியினிலே தாயகம் மீட்க
புலி வீரனாகப் புறப்பட்டாயே நவநிதியே!
சாதனை பல படைத்து சந்தன மேனியாய்
உறங்கிக் கிடக்கின்றாய் பவானே!
உனது இலட்சியம் விரைவில் ஈடேறும்!

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

அம்மா, சகோதரர்கள்,
அண்ணிமார், பெறாமக்கள்.

(36077)(26-14-13)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 15 – 11 – 1916



உதிர்வு 07 – 05 – 2005

அமரர் கந்தையா ஆழ்வாப்பிள்ளை

(ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி)

தென்புலோலியைப் பிறப்பிடமாகவும், கரந்தன் சந்தி, நீர்வேலி தெற்கை பிற்கால வதிவிடமாகவும் கொண்டு தற்பொழுது கனடாவில் வசித்து வந்த வருமாகிய எமது தந்தையாரின் மரணச் செய்தி கேட்டு எமது துன்பத்தில் நேரிலே வந்து பங்குபற்றியோருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபச் செய்தி தெரி வித்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்திபெறவேண்டி 12-06-2005 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் புலோலி, புற்றளை சித்திவிநாயகர் ஆலயத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அன்னதான நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

ஆ.ஆதவன், வல்லிபுரக் கோயில் வீதி,
புலோலி தெற்கு,புலோலி. (45821)(46-26-14-13)

– குடும்பத்தினர்.

## 16 ஆவது நாள் நினைவஞ்சலி



அமரர்

விநாயகமூர்த்தி புஸ்பராஜா

(ஓய்வு பெற்ற நீர்ப்பாசனத் திணைக்கள முகாரி)

தோற்றம் : 12.08.1945

மறைவு : 22.05.2005

பண்பின் சிகரமாய் பாசத்தின் திருவுருவாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
எங்கள் வாழ்க்கைக்கு நல்வழிகாட்டி
நல்வாழ்வு வாழவைத்த எம் அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

(36174)(51-14-45)

15.இராஜ வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

என்றும் நீங்கா நினைவுகளுடன் :

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# ஜப்பான் மீதான அணுகுண்டு வீச்சு உலக வரலாற்றில் அழியாத வடு!

இரண்டாவது உலகயுத்தம் முடிவடைந்து அறுபது ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. 1939ஆம் ஆண்டு ஆரம்பமாகிய இந்த யுத்தம் 1945ஜூன் மாதத்தில் முடிவடைந்தது. போலந்து மீது ஜேர்மனியர் நடத்திய தாக்குதலுடன் ஆரம்பமாகிய சண்டை, ஜப்பானிய நகரங்கள் மது ஐக்கிய அமெரிக்க வீசிய அணு குண்டுத் தாக்குதலோடு முடிவிற்குவந்தது.

இத்தாலி தோல்வியடைந்து சர்வாதிகாரி முசோலினி கைதுசெய்யப்பட்டு - கொல்லப்பட்டுத் தெருத்தெருவாக இழுத்துச் செல்லப்பட்டதும், சோவியத் படைகள் பேர்லின் நகரை முற்றுகையிட்டதும் 'அடல்ப்' ஹிட்லரும் காதலி ஈவா பிரவுனும் காணாமற்போனதும் ஐரோப்பாவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்திருந்தன.

ஆனால், ஜப்பான் நேசநாடுகளுக்கு அப்பொழுதும் பாரிய அச்சுறுத்தலாகவே இருந்து வந்தது.

யுத்தத்தில் பங்குகொண்ட அனைத்து நாடுகளும் களைத்துப் போயிருந்தன. ஹிட்லர் அணுவாயுதத் தாக்குதலை மேற்கொள்ளக் கூடும் என்ற பீதி தணிந்திருந்தது. பிரித்தானியா மீது ஜேர்மனியின் பறக்கும் குண்டுகள் தாக்கும் என்ற அச்சம் ஜேர்மனின் வீழ்ச்சியுடன் முடிவுக்கு வந்திருந்தது.

### மொழிபெயர்ப்புத் தவறால் ஏற்பட்ட விபரீதம்

அமெரிக்க உயர் இராணுவ அதிகாரிகள் ஜப்பானை சரணடையுமாறு கோரிக்கை விடுப்பதற்கு தயாராகினர்.

ஜரோப்பாவில் யுத்தம் முடிவடைந்து விட்டதால் ஜப்பானியர் சரணடைவதே பொருத்தமானதெனத் தெரிவித்து வாஷிங்ரனில் இருநது டோக்கியோவிற்கு செய்தி அனுப்பப்பட்டது.

அமெரிக்காவின் கோரிக்கையை கவனத்தில் எடுதத ஜப்பானிய அதிகாரிகள் "உங்களுடைய கோரிக்கையை பரிசீலிக்கிறோம்" என்ற பதிலை அனுப்பி இருந்தனர்.

## மனித நேயம் பற்றிப் பேசும் தகுதியை அன்றுடன் இழந்தது அமெரிக்கா

ஜப்பானிய மொழியில் அனுப்பப்பட்ட அந்தச் செய்தி அமெரிக்க மொழிபெயர்ப்பாளர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

தங்களது கோரிக்கையைப் பரிசீலிக்கிறோம் என்ற வாசகத்திலுள்ள 'பரிசீலிக்கிறோம்' என்ற சொல் தவறுதலாக 'நிராகரிக்கிறோம்' என்று மொழி பெயர்க்கப்பட்டிருந்தது.

ஒரு சிறிய சொல்லின் தவறான மொழி பெயர்ப்பு உலகத்தை உலுக்கிய வரலாற்றுத் தவறாக அமைந்தது. சரித்திரம் காணாத ஒரு துன்பியல் நாடகத்தை நடத்தி முடித்தது.

மனிதத்துவம் தலைகுனிந்து வெட்கித்துப் போன இந்தச் குரூர சம்பவம் இன்றும் சிலரால் நியாயப்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதை பத்திரிகைகள் வாயிலாக அறியமுடிகிறது.

### மறக்க முடியாத அந்த நாள்

ஜப்பானில் 1945 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6.ஆம்திகதி வழமைபோல் அமைதியாக விடிந்தது.

ஜப்பானில் நகரங்கள் சுறுசுறுப்படைய இன்னும் நேரம் இருந்தது. ஜப்பானிய தலைநகர் டோக்கியோ அன்று காலை மப்பும் மந்தாரமுமாகக் காணப்பட்டது. மழை பெய்யும் போல் இருந்தது. அது டோக்கியோவிற்குக் கிடைத்த அதிர்ஷ்டம் என்றே கூறவேண்டும்.

ஜப்பானின் ஏனைய நகரங்களில் இருந்த மக்களைப் போல் ஹீரோசிமா நகரத்தில் இருந்தவர்களுக்கும் எந்தவிதமான பதட்டமோ அச்சமோ இருக்கவில்லை.

எதிரியின் தாக்குதலுக்கு ஆளாவோம் என்ற எண்ணம் அவர்களுக்கு சிறிதளவு கூட இருக்க நியாயம் இருக்கவில்லை. ஏனென்றால் ஜப்பானிய எல்லைகளில் எதிரிப் படைகள் இருக்கவில்லை. தாக்குதல் எல்லைக்கப்பால் ரஷ்ய நாட்டின் வினாடிவெஸ் ரொக்கிலும், பசுபிக் சமுத்திரத்தின் மத்தியில் உள்ள 'மிட்வே' தீவுகளின் (Midway Islands) 'பேர்ன்' துறைமுகத்திலுமே அவர்கள் இருந்தனர்.

அந்த இனிய காலைப்பொழுதில் அமெரிக்கத்தளத்தில் இருந்து புறப்பட்ட அமெரிக்க யுத்த விமானம் ஒன்று 5ஆயிரம் அடி உயரத்தில் பசுபிக் சமுத்திரத்தின் மேலாக மெதுவாகப் பறந்துகொண்டிருந்தது. மெதுவாக என்றுதான் கூற வேண்டும். அந்த யுத்தவிமானத்தின் பறப்பு வேகம் பாதியாகக் குறைந்திருந்தது.

அந்த விமானிக்கு அதற்கான காரணம் உடனடியாக புரிந்திருக்க நியாயமில்லை. ஆனால், தாக்குதல் நேரம் பிந்தப் போகிறதென்பது மட்டும் விமானிக்குப் புரிந்திருக்கக் கூடும்.

டோக்கியோ நகரத்தை இலக்கைக் கொண்டு பறந்து கொண்டிருந்த விமானிக்கு தாக்குதல் இலக்கையும் மாற்றவேண்டி ஏற்படும் என்ற எண்ணமும் ஏற்பட்டிருக்காது.

### பேரின்பம்

அந்த விமானம் பசுபிக்கின் மத்தியில் பறந்தபொழுது விமானிக்கு "பேர்ள்காபர்" தாக்குதலும், அதனால் அமெரிக்க யுத்தத்தில் நேரடியாக ஈடுபடவேண்டி ஏற்பட்டதும் நினைவிற்கு வந்திருக்கும். அந்தத் தாக்குதலை நடத்திமுடித்த மூன்று நாசகாரிக் கப்பல்களையும் அதன் கப்டன் "யோமோ மோட்டோ" வையும் உலகம் இலகுவில் மறந்துவிட முடியாது.

([illegible] ஆம் பக்கம் பார்க்க)

# அறநெறிகள் கடைப்பிடிக்கப்படும் போது வாழ்வில் அமைதியும் இன்பமும் பெருகும்

## சமூகஜோதி கணேசதாசன் கருத்து



மனிதன் மனிதனாக வாழ்வதற்கு அறநெறி அத்தியாவசியமானது. மனிதன் பிறந்தது முதல இறக்கும் வரை அவனது வாழ்வு அறநெறி கலந்ததாக இருத்தல் வேண்டும். வாழ்க்கை தவறிவிட்டால் அறநெறி இல்லாமல் போய்விடுகிறது.

இவ்வாறு ஓய்வுபெற்ற அதிபர் சமூக ஜோதி கா.கணேசதாசன் தெரிவித்தார்.

உடுப்பிட்டி அம்பாள் சமேத கல்யாண சுந்தர அறநெறிப் பாடசாலையின் முதலாம் ஆண்டு பரிசளிப்பு விழா அறநெறிப் பாடசாலையின் முதல்வர் செல்வி நா.மனோன் மணி அம்மா தலைமையில் நடைபெற்றது.

இப்பரிசளிப்பு விழாவில் சமூகஜோதி கா.கணேசதாசன் "அறநெறிக் கல்வியின் அவசியம்" பற்றி உரையாற்றியபோது மேலும் தெரிவித்ததாவது:-

நாகரிக வளர்ச்சிகண்டு வாழ்ந்து வரும் மனிதர் இறைவணக்கத்தை கடைப்பிடிக்க பழகிக் கொள்ளவேண்டும். வளர்ந்துவரும் குழந்தைகளுக்கு தாயானவள் அறநெறியில் நின்று நல்ல பழக்கவழக்கங்களை கற்றுக்கொடுக்க வேண்டும்.

அன்பு, நீதி, ஒழுக்கம், இறைபக்தி என்பவற்றைக் கொண்டு சமூகநலனை சிந்தித்து செயலாற்றக்கூடிய இளைஞர்களை உருவாக்குவதற்கு அறநெறிப் பாடசாலைகள் அவசியமாகின்றன.

அறநெறிப் பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்ப பெற்றோர்கள் தவறிவிடுகின்றனர். தனியார் கல்வி நிலையங்களுக்கு பெற்றோர் கொடுத்துவரும் முக்கியத்துவத்தை அறநெறிப் பாடசாலைகளுக்கும் வழங்க முன்வரவேண்டும்.

தனியார் கல்வி நிலையங்களும் ஞாயிற்றுக் கிழமைகளிலாவது பிள்ளைகள் அறநெறிப் பாடசாலைகளுக்கு செல்லக்கூடியவாறு தமது கல்விச் செயற்பாடுகளை அன்றைய தினத்தில் நடத்தாது விடுதல் வேண்டும்.

பிறருக்கு தொண்டு செய்வதன் மூலம் இன்பம் காணவேண்டும் என்பதே அறநெறிப் பாடசாலைகளின் நோக்கம் என்பதால் பெற்றோர்கள் பிள்ளைகளைத் தவறாது இப்பாடசாலைகளுக்கு அனுப்பி அறநெறிகளைப் பயில உறுதிசெய்யவேண்டும்.

இப்பாடசாலை மாணவர்களுக்கு சீருடைகள், பரிசுகள் வழங்கப்பட்டதோடு ஆசிரியர்களும் பாராட்டப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்து காலசார அலுவல்கள் திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் உட்படப் பல பிரமுகர்கள் இந்த விழாவில் கலந்துகொண்டனர்.

(ப-152)

# சூழலைப் பாதுகாத்து டெங்கை ஒழிப்போம்

யாழ்ப்பாணம்,ஜூன்6

டெங்குநோயின் தாக்கத்திலிருந்து நாம் மீள வேண்டுமானால் சுற்றுச்சூழலின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

- இவ்வாறு வலி.தென்மேற்கு மானிப்பாய் பகுதி சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் செபமாலை லொயிட்ஸ் ஜெயராஜா தெரிவித்தார்.

'டெங்கு ஒழிப்பு மாநாடு' வலி.தென்மேற்குப் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் பிரதேச சபைச் செயலாளர் பி.விக்டர் தலைமையில் கடந்தவாரம் இடம்பெற்றது.

இதில் சிறப்பு அதிதியாக கலந்துகொண்ட சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் செபமாலை லொயிட்ஸ் ஜெயராஜா தொடர்ந்து பேசுகையில்:-

யாழ்மாவட்டத்தில் இதுவரை டெங்கு நுளம்பு நோயின் தாக்கத்திற்கு 144 பேர் வைத்திய பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் இனம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 2 பேர் இதுவரை இறந்துள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று டெங்கு நுளம்பினால் 'காவியாக' கொண்டுவரப்படும் வைரஸ் நோய் ஆபத்தானதாக மாறியுள்ளது. முதலில் காய்சலாகவும் பின்னர் மூட்டுக்களில் ஏற்படும் வலிப்புகளாகவும் ஏற்படும், பின்னர் இரத்தக்கசிவுகள் மலவாயிலாக ஏற்படும்.

எனவே, இவ்வாறான அறிகுறிகள் தென்படுபவர்கள் உடன் வைத்திய சிகிச்சைக்குட்படுத்தப்பட வேண்டும். இல்லாவிடில் சிறிது காலத்தில் பாரிய பின்னடைவுகள் டெங்கு நுளம்பு வைரஸினால் ஏற்படும்.

எனவே, இன்றைய நிகழ்வினை நாம் முக்கியமானதாகக் கருதி நாம் ஒவ்வொருவரும் அசுத்தமான இடங்களை துப்புரவு செய்ய முதலில் இறங்கவேண்டும்.

மேலும் டெங்கு நோயின் தாக்கம் பற்றிய அறிவை உடையவர்கள் அதனை சமூகமட்டத்தின் கீழ் உள்ளவர்களுக்கு கொண்டு செல்லவேண்டும்.

- இவ்வாறு பலரும் தனியாகவோ கூட்டாகவோ ஒன்று சேருவதன் ஊடாக குப்பைகள், கூழங்கள் மற்றும் கழிவு தேங்கும் இடங்களை அழிப்பதன் ஊடாக டெங்கு கொள்ளை நோயினை அழிக்கலாம். இன்று அரசும், அரச உயரதிகாரிகளும் டெங்கு நோய் தொடர்பாக பல கருத்துகளை தெரிவித்த வண்ணம் உள்ளனர்.

எனவே, டெங்குநுளம்பு நோயின் தாக்கம் ஒவ்வொரு பிரதேசத்திலும் குறைவடைய அந்தந்தப் பகுதி உள்ளூராட்சி சபைகள் ஒருங்கிணைந்த செயற்பாட்டினை மாதமாதம் நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும் - என்றார்.

மேற்படி நிகழ்வில் மானிப்பாய் சகாதார வைத்திய அதிகாரி பிரிவு பொதுச்சுகாதார பரிசோதகர் பி.சிவகுமார் மற்றும் திட்டமிடலாளர்கள் கலந்துகொண்டனர். (ப-185-204)

# தமிழர்களது கலை இலக்கிய பாரம்பரியத்தை பாதுகாக்கப் படைப்பாளிகள் முன்வரவேண்டும்

நல்லூர்,ஜூன்6

தமிழர்களுடைய வரலாற்றையும் அவர்களது கலை இலக்கியப் பாரம்பரியத்தையும் பாதுகாக்கவேண்டிய பணியில் படைப்பாளிகள் முன்னிலையில் இருக்கவேண்டும். இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக்கழ தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா.

ஜெயக்குமார் குமாரசாமியின் 'சமரசபூமி' நூல் அறிமுகவிழா அண்மையில், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேரா




சிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நூல் வெளியீட்டு விழாவில் தலைமை தாங்கி உரையாற்றிய பேராசிரியர் சிவலிங்கராஜா மேலும் தெரிவித்ததாவது:-

நூலாசிரியர் ஏற்கனவே கடற்கன்னி, அரைமணித்தியாலம் போன்ற நூல்களை வெளியிட்டுள்ளார். அவரது முதலாவது நூலை யாழ். பல்கலைக்கழகம் வெளியிட்டிருக்கிறது. இது பல்கலைக்கழகத்தில் வெளியிடப்படும் இரண்டாவது நூலாகும். ஒரு 30 ஆண்டுகளுக்கு முன் பேராசிரியர் கைலாசபதி தலைமையில் நூலாசிரியரும் நானும் கவியரங்கு ஒன்றில் சந்தித்தது நினைவுகக வருகிறது. அவர் எழுதிய கவிதைநூல் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றிருக்கிறது.

சமரசபூமி பிறக்கும்போது பல்வேறு பண்பாட்டுக் கூறுகளும் ஒன்றிலணகிறது. எல்லோரும் எதிர்பார்க்கும் நல்ல சமரசபூமியைக் காணவேண்டும் என்ற ஆசிரியரின் சிந்தனைகளை இந்த சமரசபூமி நூலின் மூலம் நாம் அறிந்து கொள்ளமுடியும் - என்றார்.

கவிவேழம் ஜெயக்குமார் குமாரசுவாமியின் 'சமரசபூமி' நூல் அறிமுக விழாவில் பேசிய யாழ்.பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி மா.வேதநாதன் தமது உரையில் கூறியதாவது:-

ஈழத்தின் பன்முகப்படுத்தப்பட்ட சிந்தனைகளையும், புலம்பெயர் நாடுகளிலுள்ள மக்களின் சிந்தனைகளையும் ஒருங்கிணைத்து புனையப்பட்டது 'சமரச பூமி' நூல். மக்களின் வரலாறு, பண்பாடு, சமூகவியல் அனைத்தையும் தெளிவான பார்வையில் இந்த நாவல் தொட்டுச் செல்கிறது.

உலக நாகரிகம், சமயசிந்தனைகள், தத்துவங்கள் என்ற தளத்தினில் நின்று 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற முது மொழிக் கமைய உலகம் முழுவதையும் சமரச சன்மார்க்க நெறிப்படி நோக்கி எழுதப்பட்டதாக இந்த நூல் அமைகிறது.

ஆசிரியர் எனக்கு அறிமுகமற்றவராக இருப்பினும் அவரது இந்த நாவலைப் பார்த்தவுடன் ஒரு புலம்பெயர்ந்த நாட்டில் இருந்து கொண்டு இப்படிப்பட்ட நாவலை எழுதியமை குறித்து மெய்ம்மறந்தேன். ஆசிரியராக பணிபுரிந்த அவர், அந்தத்துறையுடன் நிற்காது கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், ஆன்மீகம் எனப் பலதுறைகளினூடாகத் தமிழுக்குப் பலம் சேர்த்துள்ளார்.

எளிய தமிழில் புலம்பெயர்ந்தவர்களும் படிக்கக் கூடியதாக உலகளாவிய ரீதியில் ஒரு சிறந்த நாவலை தந்தது மாத்திரமல்ல. நல்ல அறிஞர்களை ஒதுக்கித் தள்ளக்கூடாது என்பதையும் தனது நாவலூடாக சுட்டிக்காட்டியுள்ளார் - என்றார்.

தமிழ்த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கி.விசாகரூபன் பேசும்போது:-

இலங்கையில் இருந்து வெளிவரும் நாவல்களை விடவும் இந்த நாவல் வித்தியாசமானது. எந்தத் துறைசார்ந்தவர்களாயினும் சரி இந்த நூலை வாசிக்கும்போது அவர்களுக்குரிய செய்திகளை இது தருகின்றது. பாரதிபாலன் இனமத பேதமற்ற உலகின் சமரசத்தை நோக்கி இதனை நகர்த்திச் செல்கின்றார். தமிழினம் இதற்கு ஒற்றுமையாக ஆவன செய்யவேண்டும் என்ற தன்னுடைய ஆதங்கத்தையும் வெளிப்படுத்துகின்றார் - என்றார்.

தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன், நடனத்துறை விரிவுரையாளர் இ.அருட்செல்வி, கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், நூலாசியர் ஜெயக்குமார் குமாரசாமி ஆகியோரும் உரையாற்றினார்கள். பேராசிரியர் ந.சிவச்சந்திரனிடம் இருந்து நூலின் முதல் பிரதியை யாழ். வர்த்தகவங்கி முகாமையாளர் எஸ்.ரவீந்திரா பெற்றுக்கொண்டார்.(ப-111-204)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பிரதான வீதியில் 2ஆம் குறுக்குத் தெரு, 115ஆம் இலக்க வீடு விற்பனைக்குண்டு. இந்த வீடு பிரபல பாடசாலைகள், நீதிமன்றம், அரச திணைக்களங்களுக்கு அண்மையில் அமைந்துள்ளது. வாங்க விரும்புவோர் இல.38, சப்பல் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்புகொள்ளவும்.
(36147)

## காணி விற்பனைக்கு

ஏழாலை, பூதவராயர் கோயிலுக்கு அண்மையில் 2½ பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: நா.கருணாகரன் T.P.: 0773086780. (36194)

## வீடு வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள உபதபாற்கந்தோருக்கு முன்பாக உள்ள இரு வீடுகள் வாடகைக்கு உண்டு. அரசசார்பற்ற நிறுவனமாயின் விரும்பத்தக்கது. ஏனையவர்களும் தொடர்புகொள்ளலாம். R.A.D.ஆனந்தராஜ், 386/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(36176)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணத்துக்கும் நல்லூருக்கும் இடையில் சிறிய குடும்பம் தங்குவதற்கு வசதியான வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு T.P. 0777 384598, 077 6636385 (36156)

## தவறிவிட்டது

யோகநாதன் ரஜீவ்குமார் என்பவரது தேசிய அடையாள அட்டை (860100991V) யாழ்.நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 110, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.
(36188)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர் - 1 பகிரா புறொயிலர் கோழிக்குஞ்சுகள் 08.06.2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. P.ரவி, சாவகச்சேரி. றஞ்சித், 517, ஸ்ரான்லி றோட். தாரகை, முதலாம் கட்டை, பருத்தித்துறை. கௌரி ஸ்ரோர்ஸ் பிரதான வீதி, பண்டத்தரிப்பு. ராதா, மாவடி, வட்டுக்கோட்டை. T.P. No: 222 3529, 222 2867. (36125)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1965 உத்தரம், கன்னிராசி, 5அடி 3அங்குலம், 23¾கிரக பாவம், B.Sc. MBL Bio, B.Sc. (Hons) M.phil. விரிவுரையாளருக்கும் 1964 திருவாதிரை, மிதுன ராசி, 12 இல் செவ்வாய், 34 கிரக பாவம், 5'4" உயரம் M.Sc. ஆசிரியைக்கும் பட்டதாரி ஆசிரியர், அரசபணியில் உள்ள மணமகன் தேவை. தொடர்பு: "சிவாலயா" 68/15, சட்ட நாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P.: 021 - 222.7844.
(36218)

## சொற்பொழிவாளர் கமலநாதன் பட்டம் வழங்கிக் கௌரவிப்பு

தென்மராட்சி,ஜீன்6

மட்டுவில் தெற்கு, வேரக்கேணி கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாக் காலத்தில் சமயச் சொற்பொழிவு நிகழ்த்திய சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் சி.கா.கமலநாதனுக்கு 'சிவநெறிச் செல்வர்' என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

ஆலய உற்சவ இறுதித் தினத்தன்று இளைப்பாறிய அதிபர் க.துரைரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இப்பட்டம் வழங்கப்பட்டது.

நிகழ்வின் தலைவரான க.துரைரத்தினம் 'சிவநெறிச் செல்வர்' பட்டத்தினையும் ஆலய மகோற்சவ குரு சிவஸ்ரீ ச.சோமஸ்கந்தக் குருக்கள் ஆலய பரிபாலன சபையினர் சார்பில் தங்கப் பதக்கம் அணிவித்து பொன்னாடை போர்த்தியும் கௌரவித்தனர்.
(எ-117-31)

## வேலையாள் தேவை

புடைவை விற்பனையில் அனுபவமுள்ள வேலையாள் தேவை. பழக விரும்புபவர்களும் வரலாம். தொடர்பு:
**மிலேனியம் பெஷன் அன் பொம்பே பஜார்,**
10, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்
(சி-43223) (மலாயன் கபே முன்பாக).

## ஆக்கப்பொருள் கண்காட்சி

தென்மராட்சி,ஜீன்6

தென்மராட்சி கல்வி வலயப்பாடசாலைகளில் மாணவர்களின் ஆக்கப்பொருட் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. பாடசாலை மட்டத்தில் நடத்தப்படும் இந்தக் கண்காட்சியில் தெரிவுசெய்யப்படும் ஆக்கப்பொருள்கள் வலய மட்டக் கண்காட்சியில் வைக்கப்படுமென வலயக் கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-117)

## கரைச்சி வடக்கு பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம், பரந்தன்

பதிவு எண்: பி.ஏ.047 திகதி: 2005-06-02

### பகிரங்க ஏல விற்பனை - 2005.06.18
### கழற்றப்பட்ட இசூசு (ISUZU) பாரவூர்தி உடற்கோப்பு

பாவனையிலிருந்த இசூசு பாரவூர்தியின் கழற்றப்பட்ட உடற்கோப்பு நல்ல நிலையிலுள்ளது. இவ் உடற்கோப்பினை 2005-06-18 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்குப் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. கொள்வனவு செய்யவிரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் ரூபா ஐந்நூறு (500/-) செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2005-06-13ஆம் திகதி தொடக்கம் பரந்தன் சந்தியிலுள்ள எமது தலைமை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

தலைவர்,
கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
பரந்தன்.
(சி-43210)(26-14-45)

## பதவி வெற்றிடம்

வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி அஸ்சூரன்ஸ்

HNB ASSURANCE
for a brighter future

பதவி: காப்புறுதி ஆலோசகர்
(Insurance Advisor)

தகைமைகள்:

01) க.பொ.த.(சா/த) தமிழ் / ஆங்கில பாடத்துடன் கணித பாடம் அடங்கலாக ஆறு பாடங்களில் சித்தி.
02) காப்புறுதி தொடர்பான அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை
03) பட்டதாரிகளுக்கும்/பல்கலைக்கழக உயர் கல்வி பயில்பவர்களுக்கும் முன்னுரிமை

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. உங்கள் விண்ணப்பங்களை 12-06-2005இற்கு முன் பூரண சுயவிவரக்கோவையுடன் இணைத்து கீழ்க்காணும் விலாசத்திற்குப் பதிவுத்தபாலில் அனுப்பவும். விண்ணப்பிக்கும்போது கடித இடப்பக்க மேல் உறையில் பதவி தொடர்பான விவரத்தைக் குறிப்பிடவும்.

**விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:**
***Manager,***
**HNB Assurance,**
**Regional Development center,**
**212 - 214, Hospital Road, Jaffna.**
(சி-43224)(26-14-45) Tel/Fax: 021 - 2226016.

## 31ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 25 - 03 - 1933 | மறைவு 07 - 05 - 2005



### அமரர் நீலையினார் சின்னையா

(ஓய்வுபெற்ற உப தபால் அதிபர்)

காலமகள் அழைப்பினால் காலனுலகு சென்றுவிட்ட
ஞாலத்திருவுருவே எந்தையே!
கோலந்தான் மறைந்தது நும் நினைவுகள் - எம்
மனமதில் நின்று மறைய மறுக்கின்றதே!
ஈன்று புறந்தந்து நல்லறிவுதனை
ஆன்ற பெருமகனாரிடம் கற்றிட
வழிப்படுத்தி வளர்ந்தந்தீர்!
எம்முடன் நீர் வாழ்ந்த காலங்கள்
கலைய மறுக்கின்றன உம்மைக் காண விழைகின்றோம்
எங்குற்றீர் எந்தையே எங்குற்றீர்?

வெள்ளாம்போக்கட்டி,
கொடிகாமம். - குடும்பத்தினர்.
(36178)(26-14-18)

## வைத்தியம்

எலும்பு முறிவு நெரிவு, தசை, நரம்பு மூட்டுவாதம், நாள்பட்ட நோகள், நாரி நோ, விசேடமாக முள்ளந்தண்டு சம்பந்தமான நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படும். முன்பு வண்ணை சிவன் கோயிலடியில் இயங்கிவந்த சிவன் கோயிலடி வைத்தியசாலை தற்பொழுது *கோப்பாயச் சந்தி, கோப்பாய* என்ற முகவரியில் இயங்கிவருகின்றது என்பதை அறியத்தருகிறேன்.

T.P.: 0777 727798.
**Dr.T. சோமசுந்தரம் விஜயன்,**
Note: வெள்ளிக்கிழமைகளில் மூடப்பட்டிருக்கும்.
(36210)(26-14-18)

## பரிசுத்த ஆவிக்கு நன்றிச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழி காட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகள் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி, எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே, என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகிறேன்.

ஓ பரிசுத்த ஆவியே ! உமக்கு நன்றி!!

- உமது அடியாள்.
(36195)(46-14-18-26)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 - 07 - 1929 | உதிர்வு 17 - 05 - 2004




### திருமதி தெய்வானைப்பிள்ளை கனகரத்தினம்

(மகேஸ்வரி)

ஆண்டு ஒன்று மறைந்தாலும் ஆறவில்லை எம்மனம்
ஈண்டு உங்கள் நினைவுடனே இங்கு நாம் வாழ்கிறோம்
ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

53, அரசடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். **பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**
(36219)(26-14-18)

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் குமாரவேலு அருளம்பலம்

(வர்த்தகர்)

உதயம்: 31-10-1934 அஸ்தமனம்: 29-06-2003
*திதி: அமாவாசை (06-06-2005)*

ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
உம் அன்பு முகம் மறையவில்லை
என்றும் எம் உள்ளத்தில் நீங்காத
நினைவாக நிலைத்திருக்கும் எங்கள் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

'மனோன்மணிவாசா', உங்கள் நினைவுடன்
ஆடியபாதம் றோட், **மனைவி,**
கொக்குவில் கிழக்கு, **பிள்ளைகள், மருமக்கள்,**
கொக்குவில். **பேரப்பிள்ளைகள்.**
(36182)(26-14-18)


REPAIRS
MONITOR
UPS
POWER SUPPLY
SCANNER
Virus Problems - PC servicing
Capture Card problems
Display problems
O/S problems
Software Installations
Memory errors
E-mail & Internet setup
Net-2-Phone configuration
LAPTOPS
Memory Problems
LCD Problems
Internet and Email Setup
Battery Problems
Power Pack Problems
Lap-top hard disk/Memory available for upgrading
Mobile Service உங்கள்அலுவலகத்திற்கு / வீட்டிற்கு வந்து திருத்தித் தரப்படும்
உங்கள் அருகில் உள்ள கிளையை அணுகுங்கள்
REPAIRS WITH GUARANTEE
அதிநவீன புத்தம் புதிய கணனிகள்
Visit our showrooms for best pricing
Warranty 3 Years Warranty
ரூ 37,000/= தொடக்கம்
Intel Celeron/P4 Computers
Also Avilable All Computer accessories
MICRO PC SYSTEMS
யாழ்ப்பாணம் 175/3 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 2225893, 077 312 6712
நெல்லியடி பிரதான வீதி நெல்லியடி,(பொலிஸ் நிலையமருகில்) 077 3039536
கிளிநொச்சி கணனி மையம், யாழ் சாலை, (கந்தசாமி கோவிலருகில்) கிளிநொச்சி
வவுனியா 73C, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா. 024 4588339, 0777308417
கொழும்பு - 06 15, 36வது ஒழுங்கை வெள்ளவத்தை 011-4513235, 011-4516764
கொழும்பு - 13 82, புதுச் செட்டித் தெரு, கொட்டாஞ்சேனை 011-4613617, 011-4619673
CORPORATE OFFICE: No.37, 37th Lane, Wellawatte, Colombo-06. Tel: 0114 510686

# கரபந்தாட்டத்தை மேம்படுத்த புதிய நடைமுறைகள் அறிமுகம்

## யாழ். மாவட்ட விளையாட்டுத் துறையினரால் 15ஆம் திகதி முதல்

யாழ்ப்பாணம்,ஜூன்6

யாழ். மாவட்டத்தில் கரபந்தாட்டப் போட்டிகளின் தரத்தை மேம்படுத்துவதற்காகப் பல்வேறு நடைமுறைகள் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் அறிமுகஞ்செய்யப்படவிருக்கின்றன.

யாழ். மாவட்ட விளையாட்டுத் துறையின் ஏற்பாட்டில் கடந்த 29ஆம் திகதி நடந்த கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இந்த நடைமுறைகள் அறிமுகஞ்செய்யப்படவுள்ளன.

புதிய நடைமுறைகள் வருமாறு:-

★ ஒவ்வொரு வீரரும் தங்கள் அணிக்குரிய சீருடை அணிய வேண்டும், அதில் முன்பக்கமும் பின்பக்கமும் இலக்கம் உரிய முறையில் பொறிக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

★ அனைத்து வீரர்களும் பாதணி அணிய வேண்டும், பாதணி அணியாத வீரர் போட்டியில் பங்குகொள்ள அனுமதிக்கப்படமாட்டார். போட்டியின்போது எச்சந்தர்ப்பத்திலும் வீரர் பாதணியினைக் கழற்றிவிட்டு வெறுங்காலுடன் விளையாடச் சந்தர்ப்பம் அளிக்கப்படமாட்டாது.

★ ஓர் அணியானது போட்டியின் குறிப்பிட்ட நேரத்திற்கு அரைமணித்தியாலத்திற்கு முன்பாக (உதாரணத்திற்கு 4.00 மணிக்குப் போட்டி ஆம்பமாகுமானால் 3.30 மணிக்கு) போட்டி நடைபெறும் இடத்திற்குச் சமுகம் தரவேண்டும். தவறும் பட்சத்தில் இரண்டாயிரம் ரூபா அபராதம் செலுத்தவேண்டும். மரண வீடு காரணமாக ஓர் அணியின் வருகையில் தாமதம் ஏற்பட்டால் அதனை சங்கம் உரியமுறையில் பரிசீலனை செய்து அபராதத்திற்கு விலக்களிக்கும்.

★ ஒரு வீரருக்கு மஞ்சள் அட்டை காட்டப்படுமிடத்து இருநூற்றைம்பது ரூபாவும் சிவப்பு அட்டை காட்டப்படுமிடத்து ஐந்நூறு ரூபாவும் தண்டப்பணமாக அவ்வீரர் செலுத்தவேண்டும். தண்டப்பணம் செலுத்தத் தவறும் பட்சத்தில் அவ்வீரர் தொடர்ந்துவரும் போட்டிகளில் விளையாட அனுமதிக்கப்படமாட்டார்.

★ கரபந்தாட்ட சங்கத்தால் கூட்டப்படும் கூட்டங்களுககுச் சமுகம் தராத கழகங்கள் தண்டப்பணமாக ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும்.

★ யாழ். மாவட்ட கரபந்தாட்டச் சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட மத்தியஸ்தர்கள் தவிர்ந்த வேறு மத்தியஸ்தர்களின் மத்தியஸ்தத்தின் கீழ் விளையாட எந்த அணிக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது. (3-190)

## உபகரணம் வழங்கல்

யாழ்ப்பாணம்,ஜூன்6

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஊடாகப் பாடசாலைகள், லீக்கில் இணைந்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு உதைபந்தாட்ட உபகரணங்களை வழங்கியுள்ளது.

இது தொடர்பான நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பரியோவான் கல்லூரி பிற்ரோ மண்டபத்தில் யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் வி.மாதுளன், பாடசாலைகளின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்கள், லீக்கின் நிர்வாக உறுப்பினர் ஆகியோர் கலந்துகொண்டனர். (3-190)

## மாவட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி; அடுத்தவாரம் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்6

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் பிரதேச செயலகங்களுக்கிடையில் நடத்தப்பட்டுவரும் விளையாட்டுப்போட்டிகளில் யாழ். மாவட்டத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி அடுத்தவாரம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பெண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் அரியாலை காசிப்பிள்ளை விளையாட்டு மைதானத்திலும் -

ஆண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் மல்லாகம்கிராம முன்னேற்றச்சங்க விளையாட்டு மைதானம், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானம் ஆகியவற்றிலும் - நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டியில் வெற்றிபெறும் அணிகள் மாகாணமட்டப் போட்டியில் பங்குபற்றத் தகுதிபெறும். (3-190)

## மத்தியஸ்தர் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்6

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கக் கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி மாலை 4 மணிக்கு இல.1, பிறவுண்றோட்டில் அமைந்துள்ள 'பசுபிக்நெற்' பணிமனையில் இடம்பெறவுள்ளது.

அனைத்து மத்தியஸ்தர்களையும் கலந்துகொள்ளுமாறு செயலாளர் பிரசன்னா கேட்டுள்ளார். (3-190)



பிரெஞ் ஓபன் ரெனிஸ் சுற்றுப்போட்டியில் பெல்ஜியம் வீராங்கனை ஜஸ்ரின் ஹெனின், பிரெஞ் வீராங்கனை மேரி பியர்ஸை வெற்றிகொண்டு சம்பியனானார். வெற்றிக் கிண்ணத்துடன் ஹெனின்.

# விளையாட்டு

## கிளிநொச்சியில் சைக்கிள் ஓட்டம்

கிளிநொச்சி, ஜூன்6

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு வலயக் கல்விப்பணிமனையினர் தமிழீழ விளையாட்டுத்துறையினருடன் இணைந்து கிளிநொச்சி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான மாபெரும துவிச்சக்கர வண்டி ஓட்டப்போட்டி நடத்தப்பட்டுள்ளது.

இப்போட்டி முல்லை புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் ஆரம்பமாகி கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் முடிவடைந்தது.

இந்தப் போட்டியில் இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த அ.சசிக்குமார் முதலாமிடத்தையும் திருவையாறு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சு.புஸ்பகாந்தன் இரண்டாமிடத்தையும் கனகாம்பிகை மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ப.கிருஸ்ணரூபன் மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர். (3)



நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலய மெய்வல்லுநர் திறனாய்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தீவக வலய நிதியுதவியாளர் பொன்.தர்மேந்திரன், நான்காவது தடவையாகவும் சிறந்த வீராங்கனையாகத் தெரிவுசெய்யப்பட்ட மு.மேனகாவுக்கு சிறப்பு வெற்றிக்கிண்ணத்தை வழங்குகின்றார். (3)

## கராத்தே போட்டியில் வென்றோர்

யாழ்ப்பாணம்,ஜூன்6

யாழ்.மாவட்ட கராத்தே சங்கம் நடத்திய கராத்தே சுற்றுப்போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கராத்தே மற்றும் காட்டாப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள், வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டு அமைச்சினால் நடத்தப்படும் கராத்தே சுற்றுப்போட்டிகளில் பங்குபற்றுவதற்குத் தகுதிபெற்றுள்ளனர்.

**கராத்தே போட்டி**

நிறைப்பிரிவு ரீதியிலான முடிவுகள் வருமாறு:

50 - 55 கிலோ - து.கஜேந்திரராசா, ம.பொபிசன், பா.குலேந்திரன்.

55 - 60 கிலோ- பி.ஆனந்தராஜ், ஞா.அன்ரனிதாஸ், அ.டெலாசன்.

60 - 65 கிலோ - ஆ.றொட்றிக் விமல்ராஜ், ஜோ.அருள்தாஸ், றோ.எஸ்.ராஜிப்சன்.

65 -70 கிலோ - வி.றேபட் விமலராஜா, பா.ஜெயதீஸ், எ.றீகன்.

70 - 75 கிலோ - ஜெ.சுபத்திரன், சி.சிவரூபன்.

75 - 80 கிலோ - கி.அன்று, இ.டனி ஒபறேன்.

80 கிலோவுக்கு மேல் - மா.மக்ஸ்மிலன், பூ.நந்தகுமார், க.விஜயபாலா.

**காட்டாப்போட்டி**

ந.ஜெகதீஸ், பு.ஸயந்தன். (3-204)



கல்வியங்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். கல்வி வலய ஆரம்பப் பிரிவு முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கமலா சுப்பிரமணியம் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு வெற்றிக்கேடயம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*(படம்: கோண்டாவில் செய்தியாளர்)*

## முல்லைத்தீவு மாவட்ட தடகளப்போட்டியில் புதுக்குடியிருப்பு ம.வி. சம்பியனாகத் தெரிவு

முல்லைத்தீவு,ஜூன்6

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட மாவட்ட மட்டத் தடகளப் போட்டியில் முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிகூடிய புள்ளிகளைப் பெற்று மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் மைக்கல் திலகராஜா தலைமையில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் 215 புள்ளிகளைப் பெற்று புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி முதலாமிடத்தையும், 135 புள்ளிகளைப் பெற்று கொக்கிளாய் அ.த.க. பாடசாலை இரண்டாமிடத்தையும், 133 புள்ளிகளைப்பெற்றுப் பாண்டியன் குளம் மகாவித்தியாலயம் மூன்றாமிடத்தையும், 68 புள்ளிகளைப் பெற்று முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி நான்காமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

இப் போட்டிகளில் மாவட்ட மட்டச் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்ட வீர வீராங்கனைகளின் விவரம் வருமாறு:-

**11 வயதுப் பிரிவு**

**ஆண்** - வை.கஜீவன் (இரணைப்பாலை றோ.க. வித்தியாலயம்).

**பெண்** - ரி.துஷ்யந்தி (ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்).

**13 வயதுப் பிரிவு**

**ஆண்** - ஜே.சுஜீவன் (மாங்குளம் மகா வித்தியாலயம்).

**பெண்** - வி.கிருஷ்ணா (வித்தியானந்தாக் கல்லூரி).

**15 வயதுப் பிரிவு**

**ஆண்** - ஈ.வசந்தன் (கொக்கிளாய் அ.த.க. பாடசாலை).

**பெண்** - ஜே.சுபிதா (கொக்கிளாய் அ.த.க. பாடசாலை)

**17 வயதுப் பிரிவு**

**ஆண்கள் - இருவர்**

ரி.ராகவன் (கலைமகள் வித்தியாலயம்), வி.கேதீஸ்வரன் (கலைமகள் வித்தியாயலம்).

**பெண்** - வி.விஜோதினி (பாண்டியன் குளம் மகாவித்தியாலயம்).

**19 வயதுப் பிரிவு**

**ஆண்கள் - இருவர்**

ஏ.எம்.எவ்.றொஷான் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), என்.வசீகரன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி).

**பெண்கள் - இருவர்**

ஈ.சர்மிளா (செம்மலை மகாவித்தியாலயம்), என்.சோபனா (பாண்டியன்குளம் மகா வித்தியாலயம்).

**21 வயதுப் பிரிவு**

**ஆண்** - எல்.நிறைஞ்சன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி).

**பெண்** - கே.அனித்தா (யோகபுரம் மகா வித்தியாலயம்). (3-410-353)

## கிளித்தட்டு, கயிறு இழுத்தல் போட்டிகள்

முல்லைத்தீவு, ஜூன்6

தமிழீழ மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட மாணவர் அமைப்பினால கரைத்துறைப்பற்றுக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட இருபாலாருக்குமான கிளித்தட்டு, கயிறு இழுத்தல் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

**கிளிதட்டு**

**ஆண்** - முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, முள்ளியவளை தமிழ் வித்தியாலயம, கள்ளப்பாடு அ.த.க.பாடசாலை.

**பெண்கள்** - குமுழமுனை மகா வித்தியாலயம், வித்தியானந்தாக் கல்லூரி, சிலாவத்தை தமிழ் வித்தியாலயம்.

**கயிறு இழுத்தல்**

**ஆண்கள்** - தண்ணீரூற்று இ.த.க.பாடசாலை, வித்தியானாந்தாக் கல்லூரி, வற்றாப்பளை மகா வித்தியாலயம்.

**பெண்கள்** - குமுழமுனை மகா வித்தியாலயம், தண்ணீரூற்று இ.த.க.பாடசாலை, கலைமகள் வித்தியாலயம். (3-410-353)

## தென்மராட்சி வலயத்துக்குப் புதிய வாகனம்

தென்மராட்சி.ஜூன்6

தென்மராட்சி கல்வி வலயத்திற்குப் புதிய ஹை ஏர்ஸ் வாகனம் கிடைத்துள்ளது.

'யுனிசெவ்' நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட இந்த வாகனம் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் கடந்த வியாழக்கிழமை வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது. (3-117-31)

# மருந்துக்கலவையாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை

வலி.தென்மேற்கு. ஜூன்6

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் நீண்டகாலமாக நிரப்பப்படாது இருந்துவரும் மருந்துக் கலவையாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு யாழ். சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதற்கென சுகாதாரத் திணைக்களத்திலும் மற்றும் யாழ். மாவட்ட அரச வைத்தியசாலைகளிலும் பத்து வருட சேவையைப் பூர்த்திசெய்திருக்கும் ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ், விஞ்ஞானம், கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச்சித்திபெற்ற திணைக்கள ஊழியர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும் என்று யாழ். சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தெரிவுசெய்யப்படுபவர்களுக்கான பயிற்சி நெறி யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும்.

இதேவேளை - இந்தப் பதவிக்கு வெளிவாரி ஆள்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையொன்றும் அண்மையில் யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையில் நடத்தப்பட்டது. 37பேர் இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றினார்கள்.

(எ-135)

## வடலியடைப்பு - சங்கானை வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்.ஜூன்6

வடலியடைப்பிலிருந்து சங்கானை அரசினர் வைத்தியசாலைக்குச் செல்லும் வீதி கடந்த பல வருடகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமையால் போக்குவரத்துக்குப் பயன்படுத்த முடியாதநிலையில் உள்ளது.

இவ்வீதியை பயன்படுத்தும் விவசாயிகளும் ஏனைய பொதுமக்களும் இந்த வீதியின் நிலைமையால் சிரமமடைந்து வருகின்றனர்.

இவ்வீதியைத் திருத்தம் செய்துதருமாறு வடலியடைப்புக் கிராம அபிவிருத்தி சங்கம், சங்கானை மேற்கு சனசமூக நிலையம் ஆகியன வலி.தென்மேற்குப் பிரதேச சபை செயலாளரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளன.

(எ-135)

## பதவி உயர்வுக்கு நேர்முகப் பரீட்சை

வலி.தென்மேற்கு.ஜூன்6

பத்துவருடகால சேவையைப் பூர்த்திசெய்த யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றிவரும் பரிசாரகர்களைத் தரம் ஒன்றுக்குப் பதவி உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சையொன்று கடந்த வாரம் யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்றது.

பத்துவருட சேவையைப் பூர்த்திசெய்த ஆண், பெண் பரிசாரகர்கள் பலர் இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றினார்கள். (எ-135)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம குருவும் எமது தீட்ஷா குருவுமான சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P. மகாவள்ளி அம்மா தம்பதியினர் இன்று (2005-06-06) திங்கட்கிழமை தமது 40ஆவது திருமண நிறைவு நாளை தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள். இவர்கள் மென்மேலும் பல்லாண்டுகாலம் சிறப்புடன் வாழ வேவில் ஸ்ரீவீரகத்தி விக்னேஸ்வரப் பெருமானையும் துவாளி ஸ்ரீ வீரகத்தி விநாயகரையும் பிரார்த்திக்கின்றோம்.

*சிவஸ்ரீ வே.பாலச்சந்திரக்குருக்கள் குடும்பத்தினர்* – வல்வெட்டி,
*சிவஸ்ரீ அ.திருஞானசம்பந்தக் குருக்கள்* – துவாளி வீதி, உடுப்பிட்டி.

(சி/43174) (24-18-13)



## வேதாகமக் கருத்தரங்கு
## திராட்சைச் செடியின் இரகசியங்கள்

தினம்: *2005, ஆனி மாதம் 18ஆம் திகதி சனிக்கிழமை*
நேரம்: காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை
இடம்: *வீரசிங்க மண்டபம், யாழ்ப்பாணம்*
இந்தியாவிலிருந்து வருகை தரும்
**Rev.V.சத்தியபால்** அவர்கள் இக்கருத்தரங்கை நடத்துவார்.
மதிய ஆகாரம், தேநீர், இப்பாடத்திற்குரிய குறிப்புப் புத்தகம் கொடுக்கப்படும்.
பதிவுக்கட்டணம்: ஒருவருக்கு ரூபா 50/-
*உங்கள் யாவரையும் அன்பாய் அழைக்கின்றோம்.*
ஒழுங்கு செய்பவர்கள்:
வேதாகமத்திற்கூடாக நடத்தும் ஊழியங்கள், இலங்கை
(Walk Thru the Bible Ministries Lanka)
தொலைபேசி: 031 2277704 அல்லது 077 7174024

குறிப்பு: 16ஆம், 17ஆம் திகதிகளில் இவர்களின் ஏற்பாட்டில் யாழ். Y.M.C. மண்டபத்தில் திருமண வாழ்க்கையைக் குறித்த வேதாகம சித்திரப் பாடத்தின் பயிற்சி முகாம் இடம்பெறும். (36202) (24-18-13)



## பாராட்டி வாழ்த்துகிறோம்



யா/கரவெட்டி ஸ்ரீ நாரத வித்தியாலய ஆரம்ப கர்த்தாவும் தற்போதும் தனது சேவையை இப்பாடசாலையில் வழங்கி இன்று (06-06-2005) ஓய்வுபெறுபவருமாகிய
**திருமதி சிவம் நாகமுத்து**
அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
**யா/கரவெட்டி ஸ்ரீநாரத வித்தியாலயம்.**

(36018) (24-18-13)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது ஆலயத்தில் 44 வருடங்களுக்கு மேலாகச் சேவையாற்றி 24-11-2004 அன்று தமது மணி விழாவை இனிதே கொண்டாடி, இன்று இல்லறம் என்னும் நல்லறத்தில் இணைந்து 40 வருடங்களை நிறைவுசெய்யும் எமது ஆலயப் பிரதமகுரு

**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P.**
**மகாவள்ளி அம்மா**

தம்பதியினரைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவர்கள் மென்மேலும் பல்லாண்டு காலம் வாழ்ந்து அம்பாளுக்குச் சேவையாற்ற எல்லாம்வல்ல ஸ்ரீமுத்துமாரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

தர்மகர்த்தா சபையினர், வல்வை மக்கள்,
வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.

(36082) (46-38-24-18-13)



உ
*ஓம் விராட் விஸ்வப் பிரமமனே நமஹ!*
**இல்லற வாழ்வின் முதலாவது ஆண்டு திருமண நிறைவையிட்டு**

## மனமுவந்து வாழ்த்துகின்றோம்



**சுன்னாகம் நியூ கார்த்திகா நகைமாடத்தின் உரிமையாளர்**
**திரு.சி.முகுந்தன் – திருமதி மு.மஞ்சுளா**

இருவரும் இல்லற வாழ்வில் இணைந்து இன்று (06-06-2005) திங்கட்கிழமை முதலாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதையிட்டு, தம்பதியினர் சீருஞ்சிறப்புமாய் இன்னும் பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென மனமுவந்து வாழ்த்துகின்றோம்.


அப்பா - **சிவன் ஆச்சாரி**
அம்மா - **பத்மாவதி**
அக்கா - **வாணி**
தம்பி - **சிறிமுருகன்**
**மற்றும் மாமா, மாமி, மைத்துனர்கள், உற்றார், உறவினர்கள்.**

*ஓம் சக்தி நகைத் தொழிலகம், சுன்னாகம்.*

(36199) (24-18-13)



## நல்லறமாம் இல்லறத்தில் நாற்பது ஆண்டுகள்



**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர் மகாவள்ளி அம்மா**
**தம்பதியினர்**

வன்னிச்சி அம்மன் கோயிலடி, வல்வெட்டி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிகதேசிகர் J.P. மகாவள்ளி அம்மா தம்பதியினர் தமது இல்லற வாழ்வின் நாற்பதாவது ஆண்டு நிறைவு நாளை இன்று (06-06-2005) திங்கட்கிழமை தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்கள். இவர்கள் இருவரும் இவ்வாறே இன்னும் பல ஆண்டுகள் சீருடனும் சிறப்புடனும் வாழ இறைவனின் அருள்வேண்டி வாழ்த்துகின்றார்கள்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

**– குடும்பத்தினர்.**

"அன்னை இல்லம்"
வன்னிச்சி அம்மன் கோயிலடி,
வல்வெட்டி, வல்வெட்டித்துறை.
T.P.No.: 0602 212267, 021 226 3185

(36021) (24-18-13)



## சர்வதேச இந்துமத குருபீடம்

**சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடம்**
**இணைந்து**
**அகில இலங்கை ரீதியாக**
**பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தும்**
**சமய – இலக்கிய அறிவுப் போட்டி**
**யாழ்ப்பாண மாவட்டம்**

**போட்டி முடிவு திகதி : 20-06-2005**

வினாத்தாள்கள் கிடைக்குமிடங்கள்:

**சிவஸ்ரீ சிவ.நித்தியானந்தக் குருக்கள்** - சங்கானை
**சிவஸ்ரீ நா.சர்வவேஸ்வரக் குருக்கள்** - சிவன் கோயில் - சுன்னாகம்
**பிரம்மஸ்ரீ மு.நாகேந்திரசர்மா** – பழம்பிள்ளையார் கோயில் - மல்லாகம்
**ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்** - நல்லை ஆதீனம் - நல்லூர்

**யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்கள் பலரின் வேண்டுகோளுக்கு இணங்க போட்டி முடிவு திகதி 20-06-2005 வரை பிற்போடப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறோம்.**

"சர்வதேச இந்துமத குருபீடாதிபதி"
**ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் J.P.**
சர்வதேச இந்துமத குருபீடம்
(அரச அங்கீகாரம் பெற்ற சமய ஸ்தாபனம்)
46, 7ஆவது லேன் - கொட்டாஞ்சேனை - கொழும்பு - 13
தொலைபேசி:
**2393436 – 0722-422239**

(சி/43310) (46-24-18-13)

# கண்ணீர் அஞ்சலி



முன்னாள் மருத்துவபீட
பீடாதிபதியும் சமுதாய
மருத்துவத்துறைத்
தலைவருமான
பேராசிரியர் செல்லத்துரை
சிவஞானசுந்தரம்
அவர்களின் மறைவு மருத்துவத்துறைக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். பேராசிரியரது மறைவால் துய ருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உற்றார், உறவி னர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(36221) (39-45-18)

மருத்துவபீட ஆசிரியர் சங்கம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# கேள்வி அறிவித்தல்
## மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்

1. யாழ்ப்பாண அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலரினால் வேலை களுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| வேலை விவரம் | ஆகக்குறைந்த தரம் (ICTAD) | மீளளிப்புச் செய்யக் கூடிய வைப்புத் தொகை | மீளளிப்புச் செய்ய முடியாத தொகை |
|---|---|---|---|
| 01. கட்டடம் நிர்மாணித்தல்– மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம் | M8 | 20000.00 | 750.00 |
| 02. நீதிமன்ற கட்டடத் தொகுதி அமைத்தல் – மல்லாகம், நீதி மன்றம் | M5 | 120000.00 | 750.00 |
| 03. சாட்சி கூடு, மலசல கூடம் அமைத்தல் – நீதிமன்ற கட்டடத் தொகுதி– மல்லாகம் நீதிமன்றம் | M9 | 10000.00 | 750.00 |
| 04. சுற்றுமதில், தண்ணீர்த் தாங்கி அமைத்தல் – மல்லாகம் நீதி மன்றம் | M8 | 20000.00 | 750.00 |
| 05. கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை– இரு மாடிக் கட்டடம் நிர்மாணித்தல் | M8 | 18000.00 | 750.00 |

2. கேள்விதாரர் நிர்மாண பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந் தக்காரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரத்தில் அல்லது அதற்கு மேல் பதிவுசெய்யப்பட்ட இலங்கை கட்டட ஒப்பந் தகாரர் சங்க அங்கத்தவர்களாகவும் கேள்விதாரர் இருத் தல் வேண்டும்.
3. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப் பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலை கொண்டிருத்தல் வேண்டும்.
4. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்த காரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத் தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. கேள்வி ஆவணத் தொகுதிகளைத் திட்டப் பணிப்பாளர் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் குறிப் பிட்ட ஒவ்வொரு வேலைக்குமான மீளளிப்புச் செய்யக் கூடிய வைப்புத் தொகையினையும், மீளளிப்புச் செய்யமுடி யாத தொகையினையும் செலுத்தி 17.06.2005ஆம் திகதி பிற்பகல் 2 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
6. கேள்வி ஆவணங்களைத் திட்டப்பணிப்பாளர், மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் எல்லா அலுவலக நாள்களிலும் நேரங்களிலும் இலவசமாக பார்வையிடலாம்.
7. கேள்விகள் இணைப்பிரதிகளில் அரக்கு முத்திரை பொறிக் கப்பட்ட உறையில் சமர்ப்பிக்கப்படவேண்டும். ஒருவர்ஆறு வேலைகளுக்கும் கேள்விகள் சமர்ப்பிக்கலாம். ஒவ்வொரு வேலைக்கும் கேள்விகள் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
8. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் *தலைவர், மாவட் டக் கேள்விச்சபை யாழ். மாவட்டச் செயலகம் யாழ்ப் பாணம்* என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் 20.06.2005ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். அல்லது திட்டப்பணிப்பாளர் அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விகள் 20.06.2005ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்விதாரர் அல்லது அவரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

மாவட்ட கேள்விச் சபை,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.
03.06.2005
(சி-43222) (39-45-18)

க.கணேஸ்,
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலர்
தலைவர்
மாவட்டக் கேள்விச்சபை, யாழ்ப்பாணம்.


# தகுதியானவர்கள் விண்ணப்பியுங்கள்

▲தேசியகல்வியியற் கல்லூரிகளில் ஆசிரிய கல்வியில் மூன்றாண் டுகால சேவை முன்தொழில் பயிற்சி ஒன்றை பயில்வதற்குத் தேவையான கல்வித் தகைமைகளையும், தகுதிகளையும் உடைய விண்ணப்ப தாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2004ஆம் ஆண்டு நடந்த ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையின் பெறு பேற்றின் அடிப்படையில் இதற்கான ஆள்சேர்ப்பு இடம்பெறும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை 2005.07.02 ஆம் திகதிக்கு முன்னதாக பரீட்சை ஆணையாளர்நாயகம், பாடசாலை பரீட்சை ஒழுங்கமைப்புப் பகுதி, தேசிய மதிப்பீட்டுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவைகள், பரீட்சைத் திணைக்களம், த.பெ.இ.1503, கொழும்பு என்னும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவேண்டும்.

★ ★ ★

▲தகவல் ஊடக அமைச்சு தரவுப்பதிவு இயக்குநர் பதிவிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரர் 18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவராக இருக்கவேண்டும்.

அத்துடன், ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை யில் ஒரே அமர்வில் 5 பாடங்களில் சித்தி யடைந்திருக்கவேண்டும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திக திகக்கு முன்னதாக செயலாளர், தகவல் ஊடக அமைச்சு, 163, பொல்ஹேஙன்கொட, கொழும்பு- 05 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்

★ ★ ★

▲பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறிக்கு 2006-2007 விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தமிழ்/சிங்கள மொழி மூலம் இந்தக் கற்கைநெறி இடம்பெறும்.

இந்த டிப்ளோமா கற்கைக்கு விண்ணப்பிப்போ 2006.01.01 அன்று 53வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில்/ அதிபர் சேவையில்/ ஆசிரிய கல்வியியலாளர் சேவையில்/ ஆசிரியர் சேவை தரம் - I இல் பதவிவகித்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் தலைவராக இருப்பவர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பப் படிவங்களை உதவிப் பணிப் பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம், மீப்பேச்சந்தி, பாதுக்கை என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

இந்தக் கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவு திகதி அடுத்தமாதம் 10 ஆம் திகதியாகும்.

★ ★ ★

▲இலங்கை விவசாயக் கல்லூரிகளில் 2006-2008 ஆம் ஆண்டுக்கான டிப்ளோமா கற்கை நெறிக்கு ஆள்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

சிங்களம்/ தமிழ்மொழிமூல போட்டிப் பரீட்சையின் மூலமே ஆள்கள் தெரிவு செய்யப்பட வுள்ளனர்.

பரீட்சைகள் 2005 செப்ரம்பர் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளன. விண்ணப்பதாரர் ஜி.சீ.ஈ. சாதாரணதரத்தில் சிங்களம் / தமிழ்மொழி, கணி தம், விஞ்ஞானம ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருப்பதுடன் சமூகக்கல்வி, விவசா யம் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்றில் திறமைச சித்தி பெற்றிருக்க வேண்டும்.

அத்துடன் 17-25 வயதுக்குட்பட்டவராக இருக்கவேண்டும்.

விண்ணப்பங்களை 2005.07.08 ஆம் திக திக்கு முன்னதாக பணிப்பாளர், விரிவாக்கப பயிற்சிப் பிரிவு விவசாயத்திணைக்களம், பேரா தனை என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

(மேற்படி விண்ணப்பங்கள் தொடர்பான மேலதிக விவரங்களை உதயன் அலுவலகத் தில் பார்வையிடலாம்). (எ-203)


Dialog ඩයලොග් டயலொக்

100/=, 400/=, 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் Sim இணைப்புகளையும், மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

சகல விதமான தொலைபேசி அட்டைகளையும் இணைப்புகளையும் (Connection) மொத்த மாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்

சகல தபால் அலுவலக சேவைகள் துரித தபால் சேவைகள் உள்நாட்டு வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகள்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்தில் இருந்தும் ஒரு சில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

(சி-43221)
(24-18-45-39)

எந்நேரமும் உன்னுடன்...

Sri Murugan
Tele Communication & Agenc Post Office,
303, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 5392, Fax: 222 3214

# கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவரான யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியரும் எமது ஆசானுமாகிய

செ.சிவஞானசுந்தரம் (நந்தி)

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம். அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

வைத்தியர்கள், 20ஆம் அணி,
மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

(36223) (39-45-18)

# கண்ணீர் அஞ்சலி



பேராசிரியர்
செல்லத்துரை சிவஞானசுந்தரம் (நந்தி)
முன்னாள் மருத்துவபீட பீடாதிபதியும்
சமுதாய மருத்துவத்துறைத்
தலைவருமான
பேராசிரியர்
செல்லத்துரை சிவஞானசுந்தரம்
அவர்களின் மறைவு மருத்துவத் துறைக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். பேராசிரியரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மருத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.
(சி-43225) (39-45-18)

பீடாதிபதி, ஆசிரியர்கள்,
உத்தியோகத்தர்கள்,
மாணவர்கள்.

# மரண அறிவித்தல்

## திருநாவுக்கரசு சுகுமார்

ஆதி மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் நாட்டை வதிவிட மாகவும் கொண்ட திருநாவுக்கரசு சுகுமார் 31.05.2005 செவ்வாய்க் கிழமை சுவிஸ் நாட்டில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு-பரமேஸ்வரி தம்பதி யினரின் அன்புப் புதல்வனும் உஷாநந்தினியின் பாசமிகு கணவரும் செல்வராசா-ஜெயலக்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும் சுமதி, சுரேஸ்குமார் (சுவிஸ்), திருக்குமார் (கனடா), காலஞ்சென்ற சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருநாவுக்கரசு (ஈசன்), ரேணுகா (சுவிஸ்), ஜெனாதரன் (சுவிஸ்), ஜெயநந்தினி (லண்டன்), சிவரூபன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் சுவேநதினி (சுவிஸ்), தயாபரன் (லண்டன்) ஆகியோரின் சகோதரரும் சஞ்சீவனின்(சுவிஸ்) பெரியத கப்பனும வாகினி, மிதிலா, நிருஷன், டிலக்சன், டினுஜன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2005) திங்கட் கிழமை சுவிஸ் நாட்டில் நடைபெறும். அதே நாளில் அவரின் அஞ்சலி நிகழ்வு மல்லாகத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*K.K.S. வீதி*
*(புதிய நீதிமன்று முன்னால்),*
*மல்லாகம்.*
*சுவிஸ் T.P.:0616813059*

தகவல்:
சுமதி (சகோதரி),
திருநாவுக்கரசு (ஈசன்- மைத்துனன்).
(36220) (39-45-18)


## ஜப்பான் மீதான அணுகுண்டு வீச்சு...

*(07ஆம் பக்கத் தொடர்ச்சி)*

### ஹிரோஷிமாவை உலுக்கிய 'சின்னப்பையன்'

மனித வரலாற்றின் மாபெரும் துன்பியலை- மனித அழிவை ஏற்படுத்தப் பறந்துகொண்டு இருந்த அந்த விமானத்தின் பக்கவாட்டில் "என்லேகா" என்ற சொல் ஆங்கிலத்தில் பொறிக் கப்பட்டு இருந்தது. அது தனது அடிவயிற்றில் 18அடி நீளமான 'சின்னப்பையன்' (Little Boy) என்று பெயர் பொறிக்கப்பட்ட அணுகுண்டைச் சுமந்தவாறு பறந்துகொண்டிருந்தது.

'கொன்சு' தீவின் தலைநகர் மேகங்களால் மூடப்பட்டிருந்ததால் 'ஷிக்கேகு' தீவின் பிர தான நகரமான ஹிரோசீமா அடுத்த இலக்கா கத் தெரிவுசெய்யப்பட்டது.

நகரம் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டு இருந்தது. பாடசாலைகளில் மாணவர்கள் கூடத தொடங்கினர். வீதிகளில் அவசர அலுவல் களுக்கும் காரியாலய வேலைகளுக்கும் பாட சாலைகளுக்கும் மக்கள் பயணித்துக் கொண் டிருந்தனர்.

சிலர் காலைவேளை உணவை அருந்திக் கொண்டிருந்தனர். எனலேகாவின் அடிவயிறு மெதுவாக திறந்துகொண்டது. எதிரிவிமானம் வருவதை ஜப்பானியர் உணர்ந்து கொள்ள விலலை. சின்னப்பையன் தலைகீழாக ஹிரோஷி மாவை நோக்கிவந்துகொண்டிருந்தான்.

உராய்வு வெப்பம் காரணமாக நிலத்தில் விழுவதற்கு முன்பதாக ஆயிரம் அடி உயரத் தில் அது வெடித்தது. ஆயிரக்கணக்கான டிகிரி வெப்பம் நெருப்பு, கறுப்பும் வெண்மையும் சேர்ந்தபுகை பாரிய குடையாக விரிந்து நக ரத்தை மூடியது. அணுக்கதிர் தாக்கம் பல மைல்களைத் தாண்டியது. 60 ஆயிரம் மக்கள் ஒரு நொடிப்பொழுதில் கருகி மாண்டு போயி னர். அவர்கள் பயணித்த வாகனங்கள், குடியி ருந்த வீடுகள், படித்தபாடசாலைகள் அனைத் துமே கருகிச்சாம்பராகின. எரிகாயங்களுக்குள் ளான புறநகர் பகுதிகளைச் சேர்ந்தவர்கள், அங்கவீனம் அடைந்தவர்கள் கண்தெரியாது, காதுகேளாது குறையுயிரும் குற்றுயிருமான வர்களின் எண்ணிக்கைக்கு கணக்கு இல்லை.

### நாகசாயியை நாசம் செய்த 'பெரிய பையன்'

அடுத்தநாள் காலையில் அதே அவலம், பயங்கரம் 'கைசு' தீவின் நாக சாகியில் இடம் பெற்றது. ஆமாம் பெரிய பையின் (Big Boy) என்ற அணுகுண்டு ஜூன் 6ஆம் திகதிகாலை அங்கு வீசப்பட்டது. ஜப்பானியர், அமெரிக்கர் களிடம் சரணாகதியடைந்தனர்.

அன்று ஏற்பட்ட அணுக்கதிர் தாக்கத்தால் இன்று பிறக்கும் ஜப்பானியக் குழந்தைகளும் ஊனமுற்றவர்களாக - அங்கவீனர்களாக - கண காது அற்றவர்களாக - பிறந்து கொண்டே இருக்கிறார்கள்.

ஜப்பான் மீதான அணுகுண்டு வீச்சு உலக வரலாற்றிலே அழியாத வடுவை ஏற்படுத்தியுள் ளது. மனித நேயம் பேசும் தகுதியை அமெ ரிக்கா அன்றுடன் இழந்துவிட்டது என்பது அறி ஞர்கள் பலரது கருத்தாகும். ★

# மகோன்னதமான மருத்துவப் பேராசான்

## இறுதி மூச்சுவரை மருத்துவத்துறையை வளர்த்தவர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் சமூக மருத்துவத்துறை பேராசிரியர், மருத்துவபீடாதிபதி ஆகியவற்றுடன் சமூக மருத்துவராக, பல சமூக மேம்பாட்டுக்காக இலக்கியங்களைத் தந்த படைப்பாளி. பன்முக ஆளுமை நிறைந்த பேராசிரியர் சிவஞானசுந்தரம் அவர்களின் இழப்பினால் எங்கள் பல்கலைக்கழக சமூகம் பெருந்துயரில் தவிக்கின்றது.

பல்வேறு இடரீடையும் எங்கள் பல்கலைக்கழகம் செயல் திறனோடு இயங்குவதில், குறிப்பாக மருத்துவபீடம் எதிர்கொண்ட சவால்களை அறிவுத்துணிவோடு சந்தித்து மேம்பாடு காண்பதில் பேராசிரியர் சிவஞானசுந்தரம் அவர்களின் பங்கும்பணியும் மகத்தானவை.

தன் இறுதி மூச்சுவரை, எழுபத்தி ஏழாவது வயதின் நோய் அழுத்தங்களிடையேயும் முழுநேர ஆசிரியராக எங்கள் சமூக மருத்துவத்துறை மாணவர்களின் தந்தையென அவர் ஆற்றிய பணியை இனி யார் ஈடுசெய்வர்....?

புகழ்பூத்த லண்டன் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டத்தைப் பெற்ற பேராசிரியர் நந்தி அவர்கள் ஐ.நா. உலக சுகாதார நிறுவனம் உட்பட பல சர்வதேச அறிவியல் - சமூக மேம்பாட்டு அமைப்புகளின் ஆலோசகராகவும் விளங்கி எங்கள் பல்கலைக்கழகத்திற்கும், தேசத்துக்கும் பெருமை சேர்த்தவர். அவரது அர்ப்பணிப்பான பணியைப் போற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வாழ்நாள் பேராசிரியர் தகைமையை அவருக்கு வழங்கி பெருமைகண்டது.

சமூக மருத்துவராக உடல் நோய்களை நீக்கிய மருத்துவ அறிஞராக மட்டுமன்றி, சமூகத்து உள்ளங்களை மேம்படுத்தும் இலக்கியகர்த்தாவாகவும் பேராசிரியர் நந்தியை இன்று தேசமெல்லாம் போற்றி நிற்கின்றது. மனித விழுமியம் மேம்பாட்டுக்கான கல்வியை எமது நாட்டில் வளர்ப்பதற்கு இவர் மேற்கொண்ட பணிகள் மகத்தானவை.

அண்மையில்கூட இவர் இலக்கிய வாழ்வின் சிறப்பினைக் கொண்டாடி மகிழ்ந்திருந்தோம். இவ்வளவு விரைவாக எங்கள் உன்னத ஆளுமையை இழந்திடுவோமென நினைத்ததில்லை.

பேராசிரியர் சிவஞானசுந்தரம் அவர்களின் பேரிழப்பில் தவிக்கும் அவரது குடும்பத்தினருடன் அவரது விரிந்த குடும்பமான பல்கலைக்கழகச் சமூகமும் ஒன்றித்து அஞ்சலி செய்கின்றோம்.

**பேராசிரியர் சு.மோகனதாஸ்,**
*துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.*

## கால மாற்றங்களுக்கேற்ப மருத்துவத்துறையை வடிவமைத்தவர்

1978ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் ஆரம்பிக்கப்பட்டபோது அதற்கு அத்திபாரமிட்டவர்களுள் ஒருவர் பேராசிரியர் சிவஞானசுந்தரம். அன்று தொடக்கம் தனது இறுதி மூச்சுவரை மருத்துவ பீடத்தின் வளர்ச்சிக்காய் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்.

சிவபாலகனாகப் பிறந்து சிவஞானசுந்தரம் எனும் பெயர் கொண்டு, 'நந்தி' என எல்லோராலும் அறியப்பட்டவர் பேராசிரியர் சிவஞானசுந்தரம். சாதாரண மக்களோடும் பேரறிஞர்களோடும் இயல்பாகவும் அன்பாகவும் பழகும் தன்மையும் திறமையும் கொண்டவர். இலக்கியத் துறையிலும் விஞ்ஞான, மருததுவத் துறைகளிலும் வளமான அறிவோடு சிறப்பான பேச்சாற்றலையும் அவர் கொண்டிருந்தார்.

சிறந்ததோர் இலக்கியவாதியாகத் தன்னை மக்களிடையே இனங்காட்டியுள்ள நந்தியின் இலக்கியப் படைப்புகள் காலத்தால் அழியாதவை. அதுமட்டுமன்றி, விஞ்ஞானத்துறை சார்ந்த நூல்கள் குறைவாகவுள்ள தமிழ்மொழியில், பேராசிரியரின மருத்துவத்துறை சார்ந்த படைப்புகள் என்றென்றும் நினைவுகூரத் தக்கவை.


சமுதாய மருத்துவத்துறையைத் தனது ஓர் அங்கமாகக் கருதி வாழ்ந்தவர் பேராசிரியர் சிவஞானசுந்தரம். யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல் இற்றை வரையும் சமுதாய மருத்துவத் (13ஆம் பக்கம் பார்க்க)

## பேராசிரியரின் வழியில்...

பேராசிரியர் சிவஞானசுந்தரம் அவர்களின் கீழ் நான் மாணவனாக சமுதாய மருத்துவத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றக் கிடைத்ததையிட்டு என்றும் பெருமைப்படுகின்றேன்.

அவரை நான் மாணவனாகச் சந்தித்தபோது எனது முதல் நாள் அனுபவம் இன்றும் ஞாபகமாக உள்ளது. விரிவுரைக்கு அவர் வரும் முன்னரே எமது மூத்த மாணவர்கள் 'அவர் மிகவும் கடுமையானவர், மாணவர் ஒழுக்கத்தில் அதிகம் அக்கறை செலுத்துபவர். எனவே, கவனமாக நடந்து கொள்ளவும்.' என்று எனக்கு அறிவுறுத்தினர். விரிவுரைக்கு வரும்போது அவருக்கு அப்போது எழுபது வயது. ஆனால், அவருடைய வாயிலிருந்து வந்த சொற்களில் ஒரு நடுத்தர வயதினருடைய குரலான உறுதியும் நியாயத்தன்மையும் காணப்பட்டது. ஒவ்வொரு வார்த்தை யின் ஆழமும் அழவிடமுடியாது. சமுதாய மருத்துவத்துறையில் நாம் பாட விதானத்துடன் ஆராய்ச்சி அறிக்கை ஒன்று சமர்ப்பிக்க வேண்டும். அதற்காக நான் பணியாற்றும்போது அவருடைய மருத்துவ ஆராய்ச்சி பற்றிய அறிவு மிகவும் வியக்கவைத்தது. இதன் பின்னா எனக்கு சமுதாய மருத்துவத் துறையுடன் நெருங்கி பணியாற்றக் கூடிய பல சந்தர்ப்பங்கள். நான் மாணவனாக இருந்த போதும் பின்னர் சிறிதுகாலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பணியாற்றும்போது கிடைக்கப்பெற்றன. அப்போதெல்லாம் அவர் எனக்கு பலதடவைகள் பல்வேறு அறிவுரைகளை வழங்கியிருந்தார்.

அவ் அறிவுரைகள் எனது வாழ்க்கைக்கு பெரிதும் உதவியது. நான் இச்சமுதாய மருத்துவத்துறையில் இணைவதற்கு பல்வேறு வகையில் ஆக்கமும் ஊக்கமும் தந்து பல்வேறு அறிவுரைகளை வழங்கியிருந்தார். நான் சமுதாய மருத்துவத்துறையில் இணைந்தபோது என்னை ஓர் இளநிலை விரிவுரையாளராக பாராது சக நண்பன் போல் நடத்திப் பல்வேறு வழிகளில் நான் எவ்வாறு முன்னேற வேண்டுமென (13ஆம் பக்கம் பார்க்க)



## பெருமதிமிக்க சேவையாளன்

தமிழகத்தின் மூதறிஞர் ராஜாஜி அவர்களினால் 'நந்தி' என நாமகரணம் சூட்டப்பெற்ற எமது பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் அவர்களின் மறைவு ஒட்டுமொத்தமாகத் தமிழினத்தின் மருத்துவ, இலக்கிய, ஆன்மீகத் துறைகளுக்கு ஏற்பட்ட பேரிழப்பாக நானும் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய ஊழியர்களும் கருதுகின்றோம். யாழ்.பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட வாழ்நாள் பேராசிரியரான இவரின் ஆளுமை வழிகாட்டலில் உருவாகிய அவரது மாணாக்கர்களில் பலர் வைத்தியர்களாகவும் மருத்துவத்துறைசார் நிபுணர்களாகவும் விரிவுரையாளர்களாகவும் பேராசிரியர்களாகவும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சேவையாற்றுகின்றனர். நானும் இவரது மாணவர்களில் ஒருவன் என்பதில் பெருமிதம் அடைகின்றேன்.

யாழ். மருத்துவபீடத்தின் ஆரம்பகாலத்திலிருந்து இறுதிவரை பேராசிரியராகவும் துறைத்தலைவராகவும் இவர் இத்துறைக்கு ஆற்றிய சேவைகள் அனந்தம். இப்பெருந்தகை மருத்துவபீடாபதயாகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆய்வு சம்பந்தமான Learning in Research என்னும் நூல் மருத்துவ மாணவர்களுக்கு மட்டுமன்றி சகலதுறை மாணவருக்கும் நந்தி ஆசிரியரின் ஈடுஇணையற்ற அர்ப்பணிப்பாகும்.

1955ஆம் ஆண்டில் மருத்துவத்துறையில் தன்னை இணைத்துக் கொண்ட நந்தி ஐயா அவர்கள் வைத்திய அதிகாரியாகவும் சுகாதார வைத்திய அதிகாரியாகவும் பல வருடங்கள் பணிபுரிந்தார். இதன்பின்னர் சமூக வைத்தியத்துறையில் பாண்டித்தியம் பெற்றுத் தன்னை ஒரு நிபுணத்துவப் பேராசிரியராக உருவாக்கினார்.

மருத்துவத்துறைக்கு இவர் ஆற்றிய பெறுமதிமிக்க சேவையினைக் கௌரவித்து யாழ். பல்கலைக்கழகம் இவருக்கு 'வாழ்நாள் பேராசிரியர்' என்ற கௌரவத்தினை வழங்கியது. உலக சுகாதார நிறுவனம் போன்ற அமைப்புகள் இவரது புலமையினை இனங்கண்டு தமது அமைப்புகளின் ஆலோசகராக் உள்ளீர்த்தன. உலக சுகாதார நிறுவனத்தின் (13ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவ ஆய்வுகளுக்கு களம் அமைத்துக்கொடுத்தவர்

எமது மறைந்த பேராசான் செ.சிவஞானசுந்தரம் அவர்களுககு எமது மருத்துவபீடத்தின் பழைய மாணவர்கள் சார்பாக அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம். உலகம் முழுவதிலும் உள்ள எமது பழைய மாணவர்கள் எமது பீடத்திற்கு வரும்போதோ அல்லது எம்முடன் தொடர்புகொள்ளும்போதோ பேராசிரியரைப் பற்றி ஒரு வார்த்தை கேட்காது விடமாட்டார்கள். இது அவர்கள் பேராசிரியர்மீது ஏற்பட்ட பற்று மட்டுமல்லாது, அவர்கள் இன்றும் பல்வேறு துறைகளில் நிபுணர்களாக விளங்கியபோது அவரின் அறிவுரைகளினால், அவரால் புகட்டப்பட்ட அறிவால் இன்றும் அவர்கள் பெற்றுவரும் நன்மைகள்தான். பேராசிரியர் சுகவீனம் உற்றிருந்தபோது அவருக்கு ஆசிவேண்டி, அவரின் உடல்நிலை தேறவேண்டுமெனப் பலரும் அங்கலாய்த்ததை நாம் அறிவோம். மருத்துவ ஆய்வுமுறைகள் பற்றி அவரால் மாணவர்களிற்கு வழங்கப்பட்ட அறிவு மறக்கமுடியாதது. பழைய மாணவர் சங்கத்தின் வெளிநாட்டு கிளை அவர்களின் வருடாந்த சஞ்சிகையில் பேராசிரியரின் வாழ்த்துரை வேண்டுமெனக் கேட்டிருந்தனர். அதனை நாம் பெற்றுக்கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படும் என் நாங்கள் கருதியிருக்கவில்லை. இவ்வாறான நல்லறிவு புகட்டிய எமது பேராசிரியரின் துயர் ஏற்றுக்கொள்ள முடியாதது. ஆனால், மருத்துவ உலகில் நாம் போராடவேண்டிய எத்தனையோ சாதனைகள் இன்னும் உண்டு என்பதை நாம் உணரவேண்டியதை இவ்வாறான மறக்கமுடியாத மரணங்கள்தான் உணர்த்துகின்றன. உலகெங்கிலும் பல்வேறு வைத்தியத்துறைகளில் தமது சேவையை ஆற்றி வரும் மருத்துவர்கள் உதவியுடன் பேராசிரியரின் விருப்பமான இவ் யாழ். மருத்துவபீடத்தின் வளர்ச்சியும் அதன் மக்களுக்கான சேவையும் மேலும் வளர பழைய மாணவர்கள் அமைப்பு என்றும் உறுதுணையாக இருக்கும்.

**தலைவர்/செயலாளர்**
*பழைய மாணவர் அமைப்பு, யாழ். மருத்துவபீடம்,*
*யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.*

**மருத்துவபீட மாணவர் ஒன்றியம்**
யாழ். பல்கலைக்கழகம்.

## நேரத்தையும் ஒழுக்கத்தையும் கண்களாக மதித்தவர்

பேராசிரியர் சிவஞானசுந்தரம் எனும் பெருமனிதரை, நந்தி எனும் தமிழ்ப்பெருமகனை, இழந்து துயருற்றிருக்கும் இவ்வேளையில் அவரது ஞாபகங்களை மீட்டிப்பார்க்கிறேன்.

பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கம்பீரமான ஆசானாக, சமுதாய மருத்துவத்துடன் தமிழை இலகுபடுத்த வேண்டிய அவசியத்தையும் உதாரணங்களுடன் எமக்குக் கற்பித்து, தமிழ்ப்பற்றையும் அதனுடன் சமுதாய மருத்துவத்துறையின் சவால்களையும் அவற்றை எதிர்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் எமக்கு ஊட்டியவர்.

சமுதாய மருத்துவம், மலகூடங்களைக் கண்காணிக்கவும் கழிவு வாய்க்கால்களைத் துப்புரவு செய்யவுமே கற்பிப்பதாக இருந்த கருத்தை மாற்றி அது சுகத்தை விருத்திசெய்ய, மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த அவசியமான துறை எனும் நிலை ஏற்பட முக்கிய காரணியாக இருந்தவர்.

யாழ். மருத்துவபீடம் ஆரம்பித்த நாளிலிருந்து அதன் வளர்ச்சிக்காகத் தன்னையே அர்ப்பணித்து இறுதிவரை கற்பித்தலிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தவர். பேராசிரியராகவும் பீடாதிபதியாகவும் கல்வியியலாளராகவும் அவர் ஆற்றிய சேவை அளப்பரியது. நோயின் தாக்கம் அதிகரித்ததாக அறிந்து அவரைப் பார்க்கச் சென்ற வேளையிலும் சமுதாய மருத்துவத்துறையின் பிரச்சினைகளையும் அவற்றைத் தீர்க்கும் வழிமுறைகள் பற்றியும் பேசினார்.

எமது பீடத்தின் வெள்ளிவிழாக் குழுவுக்குத் தலைமை தாங்க விழா நிகழ்ச்சிகளை நன்கு திட்டமிட்டு, நேரம் தவறாமல் நிகழ்ச்சிகள் நடந்தேற மாணவரையும் ஆசிரியரையும் தந்திரமாகவும் நிதானமாகவும் வழிநடத்தியவர். மாணவருக்கு நல்ல ஆசானாகவும் சக ஆசிரியருக்கு நல்ல நண்பனாகவும் தவறுகளைத் தந்திரமாகவும் உடனடியாகவும் சுட்டிக்காட்டி நல்லவையே நடக்க உதவியாக இருந்தவர்.

உலக சுகாதார நிறுவனத்திலும் வேறுபல நிறுவனங்களிலும் நிபுணராகவும் ஆலோசகராகவும் கடமையாற்றச் சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதும் குறுகிய கால நியமனங்களை மட்டும் பெற்று, மீண்டும் மீண்டும் யாழ். மருத்துவபீடத்துக்கே தனது சேவையைத் தொடர்ச்சியாக வழங்கிவந்தவர்.

எச்சந்தர்ப்பத்திலும் நேரத்தையும் ஒழுக்கத்தையும் இரு கண்களாகப் போற்றி வந்தவர். தரத்தை என்றும் விட்டுக்கொடுக்காதவர். யாருக்குமே தீங்கு நினையாதவர்.

உடல் வலிமை குன்றிவந்த இறுதி நாள்களிலும் உள உற்சாகம் சற்றும் குறையாமல் "என்றும் பதினாறு" ஆகத் தனது கடமைகளை செவ்வனே செய்து வந்தவர். பல்கலைக்கழக விதிகளின்படி அவர் எப்போது ஓய்வுபெற்றார் என்பது யாருக்குமே நினைவிலில்லை. இறுதிவரை எமது ஆசிரியர் குழாத்துள் ஒருவராகவே இருந்தவர். அவரது சிந்தனைகளும் கோட்பாடுகளும் என்றும் எமது பீடத்தில் வாழும்.

எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்பதே அவரது குறிக்கோளாக இருந்தது. வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்த்துள் சென்றுவிட்டார். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தவர்க்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*வைத்திய கலாநிதி* **க.சிவபாலன்,**
*பீடாதிபதி, மருத்துவபீடம்.*

## மாணவர்கள் உயர்நிலையடைய வழிகாட்டிய பேராசான்

மருத்துவபீட வாழ்நாள் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் அவர்களது மறைவையிட்டு ஆழ்ந்த துயரமும் அதிர்ச்சியும் அடைந்தோம். அவரது இழப்பு மருத்துவபீடத்திற்கு மாத்திரமன்றி தமிழ் சமுதாயத்திற்கு ஈடுசெய்யமுடியாத பெரும் இழப்பாகும். 1928ஆம் ஆண்டு சிவம்+ஞானம்+சுந்தரம் எனும் மூன்று பதங்களையும் தன்னகத்தே கொண்டு அவதரித்த பேராசிரியர். எமது மருத்துவ பீடம் 1978ஆம் ஆண்டு உருவாகுவதில் பெரும்பாடுபட்டவர்.

அன்றிலிருந்து இன்று வரை அவர் மருத்துவ பீடத்திற்கு ஆற்றிய சேவைகள் அளப்பரியன. அவர் மருத்துவ பீடத்தின் பீடாதிபதியாக, சமுதாயத்துறைத் தலைவராக எமது மாணவர்களை உயர்ந்த நிலைக்கு உருவாக்கிய பெரும் தலைவர். உலகம் பூராகவும் எமது பீடத்திலிருந்து வெளியேறிய மாணவர்கள் உயர்ந்த நிலையிலும் உயர் ஸ்தானங்களிலும் இருப்பதற்குக காரணம் பேராசிரியரின் வழிகாட்டலே என்றால் மிகையாகாது.

எமது பேராசானுடைய சேவை எமது பீடத்தின் சமுதாய மருத்துவத்துறையுடன் மாத்திரம் நின்றுவிடாது எமது சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் வித்திட்டது. எமது பீடத்தின் வெள்ளிவிழா நிகழ்வுகளைத் தலைமை தாங்கிச் சிறந்த முறையில் நடத்திப் பெருமை சேர்த்தார்.

கடந்த மாதம் மருத்துவ மாணவரின் கலை, இலக்கிய, மருத்துவ ஆக்கங்களை உள்ளடக்கியதான 'நாடி' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வதாய் இருந்தும் இறுதி நேரத்தில் அவரது உடல்நிலை அந்நிகழ்வில் எம்முடன் கலந்து சிறப்பிப்பதற்கு அனுமதிக்கவில்லையாயினும் அவரது இலக்கியங்கள், எழுத்தாக்கங்கள், சிறுகதைகள், நாடகங்கள், எம் தேசத்தில் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கும்.

எம்மை வழிநடத்திய எமது தந்தை எம்மை விட்டுப்பிரிந்தாலும் அவரது சுவடுகள் மருத்துவபீடத்திலும் மாணவர்கள் மத்தியிலும் என்றும் வாழ்வது உறுதி.

**த.காண்டீபன்,**
*தலைவர்,*
*மருத்துவபீட மாணவர் ஒன்றியம்,*
*மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்.*

## கலைமாணி பகுதி II பெறுபேறு இன்று

யாழ்ப்பாணம்.ஜுன்6

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் அலகின் கலைமணி பகுதி II - 2001 பரீட்சைப் பெறுபேறுகள் இன்று திங்கட்கிழமை வெளியிடப்படவுள்ளன.

கடந்த வருடம் மார்ச் மாதம் இப்பரீட்சைகள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பரீட்சைப் பெறுபேறு தொடர்பான விவரங்களை வெளிவாரிப் பிரிவின் விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என உதவிப் பதிவாளர் தெரிவித்தார். (எ-204)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மகேஸ்வரி பொன்னம்பலம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி (இராசமணி) பொன்னம்பலம் நேற்று (05.06.2005) ஞாயிற்றுக்கிழமை மலேசியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் மாதகல் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் இராமலிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் அருமை மகளும் அராலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற அம்பலவாணர் பொன்னம்பலம் அவர்களது அன்பு மனைவியும் நவரத்தினேஸ்வரன், திருமதி நவமலர் செல்வரத்தினம், திருமதி ஞானமலர் பொன்னம்பலம் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மலேசியாவில் இன்று (06.06.2005) திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

No.7, Jalan 5/21A,
46000, petaling Jaya,
Selangor, Malaysia.
Tel. 060379565297 (36233)(30-11-12)

தகவல்:
இ.இராஜசுந்தரம் (சகோதரர்)
34, குளப்பிட்டி ஒழுங்கை,
கொக்குவில்.

## கணபதிப்பிள்ளை சொர்ணலிங்கம் (சோதி)



வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரம், சிற்பனையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, ஆட்டுப்பட்டித்தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சொர்ணலிங்கம் நேற்று (05.06.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிளளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராசா - நாகம்மா தம்பதிகளின அன்பு மருமகனும் கௌரிலெச்சுமியின் அன்புக் கணவரும் றமேஷ், தவனேஷ், மயூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தியின் அன்பு மாமனாரும் பபிதரனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.06.2005) திங்கட்கிழமை பிற்பகல் நான்கு மணிக்கு பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆட்டுப்பட்டித்தெரு
கொழும்பு -13 (36232)(30-11-12)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி கண்மணி தெய்வேந்திரம் (இராசாத்தி)

(இளைப்பாறிய ஆசிரியை)



அம்மன் வீதி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி தெய்வேந்திரம் நேற்று (05.06.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - நாகரத்தினத்தின் மூத்த மகளும் அமரர் செல்லத்தம்பி தெய்வேந்திரத்தின் அன்பு மனைவியும், புவனேஸ்வரி, அமரர் நடராஜா, அமரர் இலட்சுமணசாமி, பாக்கியம், கந்தசாமி, தியாகராஜா, மனோகரன், இராஜமனோகரி ஆகியோரின் சகோதரியும், செல்லதம்பி ஜெகநாதன்( ஆஸ்திரேலியா) அமரர் இளையதம்பி, நாகேஸ்வரி, புஷ்பராணி, மகாலட்சுமி, ஜெயராணி, இந்துமதி, குணராசா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24, அம்மன் வீதி,
பண்டத்தரிப்பு.
(36237)(30-11-12)

தகவல்:
ந.நீலவர்ணகுமார்
(குமார் - மருமகன்)

## தொண்டைக்குள் உணவு சிக்கியதால் இளைஞர் உயிரிழப்பு!

தென்மராட்சி.ஜுன்6

இரவு உணவு உண்ணும்போது பிட்டு தொண்டைக்குள் சிக்கியதில் ஒருவர் மூச்சுத் திணறி உயிரிழந்தார்.

கடந்த வியாழக்கிழமை சரசாலை மத்தியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கிருஷ்ணகுமார் (வயது - 30) என்பவரே மரணமானவராவார்.

வரணி, மதுசார வடிசாலையில் கடமையாற்றும் இவர் வேலையிலிருந்து வந்து இரவு உணவு உண்டார் என்றும் -

அப்போது பிட்டு தொண்டைக்குள் சிக்கி மூச்சுத்திணறல் ஏற்பட்டதாகவும் -

மந்திகை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் மரணமானார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவரது சகோதரனும் கடந்த 2000ஆம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தன்று பிட்டு தொண்டைக்குள் சிக்கி மரணமானார் என்று கூறப்படுகின்றது. (ஒ-31-117-170)

## பொங்கல் உற்சவம்

யாழ்ப்பாணம்.ஜுன்6

புங்கன்குளம், வில்வையடி, ஸ்ரீநாகபூசனி அம்பாள் ஆலயத்தின் 8ஆம் மடை 11ஆம் பொங்கல் இன்று நடைபெறவுள்ளது.

இன்று விசேட அபிசேகங்களுடன் முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகும் பொங்கல் நிகழ்வைத் தொடர்ந்து அன்னதானமும் இடம் பெறும். (ஒ-12)


### கடை வாடகைக்கு

கண்டி வீதி, சாவகச்சேரியில் நவீன சந்தைக்கு அண்மையில் கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0773164505
(36235)(30-11-12)

நாதலீஸ் சினிமா — ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம். குளிரூட்டப்பட்டது.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா ஜெயராம், ஸமீக்ஷா மற்றும் பலர் நடித்த
அறிந்தும் அறியாமலும் (ரீகல்)
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்



54 ஆவது நாளாக
ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடித்த
காட்சிகள்: 11.00. 3.00. 7.00 (பு.நே.)
கடைசிவாரமாக சந்திரமுகி (ரீகல்)

ராஜா யாழ்ப்பாணம்.
புதிய வெளியீடு
லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி, லக்ஸ்மி, சுஜாதா, நிழல்கள்ரவி நடித்த
சூர்யா (ரீகல்)
ஆக்ஷன் படம்.
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)


## குடும்பத்தகராறில் கத்திக்குத்து: குடும்பஸ்தர் பலி; யுவதி படுகாயம்!

தென்மராட்சி,ஜுன்6

குடும்பத்தகராறில் மருமகனின் கத்திக்குத்துக்கு மாமன் பலியானார். இவரது மகள் காயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு வரணி நாவற்காட்டில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கந்தன் நீலயினார் (வயது-54) என்பவரே மரணமானவராவார். இவரது மகளான நீலயினார் சுதர்ஜினா (வயது-24) என்பவர் காயமடைந்தார்.

கத்திக்குத்துக்கு இலக்கான இருவரையும் வாகனத்தில் சாவகச்சேரி மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றபோது வழியில் நீலயினார் மரணமானார். காயமடைந்த சுதர்ஜினா மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி மருத்துவமனையிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். இறந்தவரின் சடலமும் யாழ்.போதனா வைத்தியசாலை சவச்சாலையில் ஒப்படைக்கப்பட்டது. ஒன்பது மாதக் கர்ப்பிணியான தனது மனைவியை கடந்த ஆறுமாதங்களாகப் பிரிந்திருந்த மருமகன் சம்பவ தினத்தன்று மனைவியை தன்னுடன் அழைத்துச் செல்ல முயற்சித்தார் என்றும் - அப்போது மாமனுடன் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியதால் கத்திக்குத்துச் சம்பவம் இடம்பெற்றதாகவும். இதனைத்தடுக்கச்சென்ற மற்றொரு மகள் தோள் பகுதியில் கத்திக்குத்துக்கு இலக்கானார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-31-117)

## கண்ணீர்க் காணிக்கை



எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய
யாழ்.பல்கலைக் கழக வாழ்நாள் பேராசிரியர்
செல்லத்துரை சிவஞானசுந்தரம் (நந்தி)
அவர்கள் இயற்கையெய்தியமை குறித்து நாம் பெருந்துயரமடைகின்றோம். இது ஓர் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கண்ணீர்க்காணிக்கை சமர்பித்து ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

(C-43229)(54-30-11-12)

- யாழ்.றோட்டறிக் கழகத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் திருநாவுக்கரசு சுகுமார் (ரவி)

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும்சுவிற்சர்லாந்தை வதிவிடமாகவும் கொண்ட அமரர் திருநாவுக்கரசு சுகுமார் (ரவி) அவர்கள் (31.05.2005) செவ்வாய்க்கிழமை சுவிஸில் காலமாகிய செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவன்கோயிலடி,
மட்டுவில் மத்தி, சாவகச்சேரி. (36234)(30-11-12)

துரைசிங்கம்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரான தேவசகாயம் தவநாயகம் அவர்களின் பாசமிகுதாயார்

### திருமதி தேவசகாயம் மாகிறேட்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
வேலணை. (36231)(30-11-12)

சமுர்த்தி அபிவிருத்தி
உத்தியோகத்தர்கள்.

# மகோன்னதமான மருத்துவப்...

## பேராசிரியரின்...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறிவுரைகள் வழங்கினார்.

எப்போதும் ஒழுக்கத்தை மிகவும் விரும்புவர். எப்போதும் கடமையை மதிப்பவர். தான் பேராதனை மருத்துவபீடத்தில் விரிவுரையாளராக சேரும்போது முதல்நாள் பின்நேரம் வரை யாழ். போதனா வைத்திய சாலையில் பணியாற்றிவிட்டு இரவு இரவாக சொந்தக் காரில் கண்டிசென்று அடுத்தநாள் 8மணிக்கு வேலைக்கு சென்றதாகவும் கூறுவார். எப்போதும் இந்த மருத்துவ பீடத்தையும். சமுதாயமருத்துவத் துறையையும், மருத்துவ மாணவர்களைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பார். யாழ்ப்பாணத்தில் மருத்துவ ஆய்வுகள் பலவற்றைச் செய்யவேண்டும் என்பதில் ஆர்வமாக இருந்தார். யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் அதிகமாக உள்ளது என அறிந்து புற்றுநோய்கள் பற்றிய ஆய்வு ஒன்றைத் தொடங்கியிருந்தார். துரதிர்ஷ்டவசமாக இந்த ஆய்வு தொடங்கி ஒரு சிலமாதங்களில் அவருக்குப் புற்றுநோய் ஏற்பட்ட போதிலும் அதனை செய்து முடிக்கவேண்டுமென ஆர்வமாக இருந்தார். ஆய்வினை வெற்றிகரமாக செய்து முடித்தபோதிலும் அதனை வெளியிடமுன்னர் எமது ஆசான் எம்மை விட்டுப் பிரிந்தது மிகவும் மனவருததத்திற்குரியது. இன்னும் ஒரு சிலவருடங்கள் எம்முடன் இருந்து மேலும் பல ஆய்வுகள், அறிவுரைகளை வழங்கியிருக்கக்கூடாதா என மன ஏக்கம் இருக்கிறது. ஆனால், விதியின் வழி நின்றாக வேண்டியது நம் எல்லோரினதும் கடமை. ஆனால், நாம் அவர் வழியில் அவர் எமக்கு வழங்கிய அறிவுரைகளை கொண்டு சமூகத்திற்கு அவர் செய்ய வேண்டியதை செய்வதுதான் அவரின் மாணவர்களாகிய எல்லோரினதும் கடமை.

டாக்டர் இ.சுரேந்திரகுமாரன்,
*மாணவ ஆலோசகர்,*
*மருத்துவபீடம்.*

## கால மாற்றங்களுக்கேற்ப...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

துறைக்காக அரும்பணியாற்றியுள்ளார். தமிழ் மக்கள் கடந்து வந்த கடினமான, துயர்சுமந்த காலப்பகுதிகளில் கூட எங்கும் செல்லாது மக்களோடு மக்களாக நின்று பணியாற்றிய அவரது சேவை மனப்பாங்கு நன்றியுடன் நோக்கத்தக்கது.

நவீனகால மாற்றங்களுக்கேற்பவும் தமிழர் தாயகத்தின் யுத்த சூழ்நிலைகளுக்கேற்பவும் சமுதாய மருத்துவத்துறையை வடிவமைத்து அதன் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பேராசிரியர் பெரும்பங்காற்றியுள்ளார். பல்கலைக்கழகம் தாண்டி தாதியர் பயிற்சிக் கல்லூரி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை என்பவற்றிலும் சமுதாய மருத்துவத்துறை சார்ந்த பணிகளை முன்னெடுத்துள்ளார்.

சமுதாய மருத்துவத்துறை சார்ந்த ஆய்வுகளுக்குக் களம் அமைத்துக்கொடுத்த அவரது மருத்துவப் பணி குறிப்பிடத்தக்கது.

"ஆய்வினைக் கற்றுக்கொள்ளல்" எனும் அவரது ஆங்கில நூல் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் கற்றலுக்குரிய நூலாகப் பயன்படுகின்றது. சமுதாய மருத்துவத்துறை மூலம் சாதாரண கிராமிய மட்டம்வரை சென்று பயிற்சிகளிலும் வேலைப்பட்டறைகளிலும் மக்களோடு கலந்து செயற்பட்டுள்ளார். அவரது இலக்கியக் கதாபாத்திரங்களில் இன்றுவரை இந்தக் கிராமிய மனிதர்கள் உயிரோடு உலாவுவதைக் காணமுடிகின்றது.

எத்தனையோ உயிரோட்டமான கதாபாத்திரங்களை எம்மத்தியில் உலவவிட்ட பேராசிரியர் நந்தி அவர்கள் இன்று எம்மிடையே இல்லை. அன்னாரின் மறைவு இலக்கிய உலகிற்கும் மருத்துவ உலகிற்கும் ஈடுசெய்யமுடியாத இழப்பாகும். ஆயினும், அவரது பணிகளும் படைப்புகளும் அவரை என்றும் அழியாப் புகழுடன் வாழவைத்துக் கொண்டிருக்கும். மறைந்தும் மறையாதவராக நம்மிடையே நந்தி இருப்பார் என்பது உறுதி.

*வருகை பேராசிரியர்* ந.சிவராஜா
*சமூகமருத்துவத்துறை.*

## பெறுமதிமிக்க...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுசரணையின்கீழ் மலேசியா, வடகொரியா, சிம்பாவே, மொங்கோலியா, பங்களாதேசம், இந்தியா, ஜோர்டான் ஆகிய நாடுகளில் பணியாற்றியுள்ளார.

ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றில நந்தி அவர்கள் காலத்தால் அழியாத படைப்பாளி ஆவார். இவரது இயற்பெயரைவிட 'நந்தி' என்னும் நாமமே நாடறிந்ததாகும். சிறுகதை, நாவல், கட்டுரை, ஆய்வுக்கட்டுரைகள், விமர்சனங்கள் என நந்தி ஐயா தடம் பதித்த களங்கள் ஏராளம். இதைவிட, ஆன்மீகப் பணியினில் பகவான் சத்யசாயிபாபா மனித மேம்பாட்டுக் கல்வி நிலையத்தின் அகில இலங்கை இணைப்பாளராகவும் செயற்பட்டவர். எளிமை யான சுபாவமும் தன்னடக்கமும், நாட்டுப்பற்றும் தமிழ் அபிமானமும் கொண்ட இம்மகான், இன்று எம்மிடையேயில்லை. இவரது இழப்பு குறிப்பாக யாழ். மருத்துவ சமூகத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிடியாகும். இவரது இழப்பினால் துயருறும் மனைவி, பிள்ளைககள், குடும்ப உறவினர்கள் ஆகியோருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அவரது ஆன்ம ஈடேற்றத்திற்கு இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.

பணிப்பாளரும் மருத்துவ அதிகாரிகளும்
யாழ்.போதனா வைத்தியசாலை.

## ஊர்காவற்றுறையில் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம்,ஜீன்6

ஊர்காவற்றுறைப் பொலீஸாரால் அனலைதீவு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கணேசன் கிருஷ்ணமூர்த்தி (வயது-39) என்ற குடும்பஸ்தரின் சடலம் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது.

நேற்றுமாலை ஊர்காவற்றுறை இறங்கு துறைப் பகுதியில் இருந்து இந்தச் சடலம் மீட்கப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

சடலம் மரணவிசாரணை, பிரேத பரிசோதனை என்பவற்றின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இவரது இறப்பிற்கான காரணம் எதுவும் தெரியவரவில்லை.

(ஓ-12)

## ஆனைக்கோட்டை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்துகொண்டிருந்த இந்த இளைஞரை மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் என்று கூறப்படும் இருவர் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர். சூடுபட்டு ஆலயச் சுவருடன் சரிந்து வீழ்ந்த மேற்படி நபர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை நடத்திய மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன், சடலத்தை மரண விசாரணைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கும்படியும் -

இறந்தவரை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கும்படியும் - மானிப்பாய் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

சடலத்திலிருந்து ஒரு தொகைப்பணம் நீலநிற சாவிக்கொத்தில் இணைக்கப்பட்டிருந்த திறப்பு ஒன்று ஆகியவையும் சடலத்தின் அருகே தொலைபேசி இலக்கம் எழுதப்பட்ட தாள் ஒன்றையும் மீட்ட பொலீஸார் தொடர்ந்து விசாரணை நடத்திவருகின்றனர்.

(ஓ-7-86-100-78-15)

## ரெலோ அலுவலகத்தில் படையினர் சோதனை

மட்டக்களப்பில் உள்ள ரேலோ அமைப்பின் மாவட்டச் செயலகத்தில் பொலீஸாரின் உதவியுடன் இராணுவதினர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு 11.45 மணிமுதல் 12.30 வரை தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது படையினருடன் ராசிக்குழுவினர் சிலரும் இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## அரச பகுதிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்ததை உறுதிப்படுத்திய அதன் பேச்சாளர் ஹெலன் ஒலவ்ஸ்டொட்டிர் இவ்வாறான போக்குவரத்து ஏற்பாடுகளில் இடம்பெறும் தாமதங்கள் போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கு அச்சுறுத்தலாக அமையுமென்று புலிகள் கருதுகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை ஓமந்தையிலிருந்து இராணுவப் பாதுகாப்புடன் மட்டக்களப்பு செல்லவிருந்த புலி உறுப்பினர் 30பேரின் பயணம் பாதுகாப்புக் காரணங்களுக்காக நேற்று ரத்துச் செய்யப்பட்டது. இன்று இடம்பெறவிருந்த புலி உறுப்பினர்களது ஏனைய பயணங்களும் ரத்துச் செய்யப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தலதாமாளிகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு விகாரமாதேவி பூங்காவிற்கு அருகிலிருந்து கண்டி தலதா மாளிகைக்கு வாகனப் பேரணியொன்றையும் ஜாதிகஹெல உறுமய நடத்தியது.

நேற்றுமாலை வாகனப்பேரணி நிறைவடைந்த பின்னர் கண்டி தலதா மாளிகையில் விசேட பிரார்த்தனைகளும் இடம்பெற்றன. நாளை காலை நாடாளுமன்றம் கூடும்போது பொதுக்கட்டமைப்புத் தொடர்பான விசேட அறிக்கையொன்றை ஜாதிக ஹெலஉறுமய நாடாளுமன்றத்தில் வெளியிடவுள்ளது. இதன் பின்னர் ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டி சென்று இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

## கருணா குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்துகொண்டிருந்தபோது இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தேநீர் கடையொன்றில் தேநீர் அருந்துவதற்காக வாகனம் நிறுத்தப்பட்டபோது அங்கு வந்த இரண்டு இனந்தெரியாத நபர்கள் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

கருணா குழுவினரும் பதில் தாக்குதல் மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் வெள்ளிக்கிழமை இரவு மன்னம்பிட்டியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க லொறித் தொழிலாளியான சிவசாமி சிவகுமார் (வயது - 27) என்பவர் கருணா குழுவினராலேயே சுட்டுக் கொல்லப்பட்டார் என்று கூறப்படுகின்றது.

குறிப்பிட்ட நபர் இரவு மாரியம்மன் கோவிலுக்குச் சென்றுவிட்டு நண்பர்களுடன் வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது வழிமறித்த நபர்கள் அவரது முகத்தில் டோர்ச் லைட் வெளிச்சத்தைப் பாய்ச்சி அடையாளம் கண்டு ரி-56 ரகத் துப்பாக்கி மூலம் சுட்டுக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் எனக் கூறப்பட்டது.

(முன்னர் வந்த செய்தி 6ஆம் பக்கத்தில்)

## சிவகுமாரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் கலைவிழி, வசாவிளான் மகாவித்தியாலய அதிபர் கனகராஜா, உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபர் ஈஸ்வரநாதன், வலி.கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் இராசதுரை ஆகியோர் ஏற்றினர்.

பின்னர் பொன்.சிவகுமாரனின் திருவுருவப் படத்திற்கு அவரது தாயார் திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரை மற்றும் சகோதரர் பொன்.சிவசுப்பிரமணியன் ஆகியோர் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து மைதானத்தில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் வைக்கப்பட்டிருந்த மாணவ மாவீரர்களின் திருவுருப் படங்களுக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தமிழீழ மாணவர் அமைப்பின் யாழ்மாவட்டப் பொறுப்பாளர் கிருஷ்ணா, பொன்.சிவகுமாரனின் சகோதரன் பொன்.சுப்பிரமணியன், யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் கமல்ராஜ் உட்படப் பலர் நினைவுரை நிகழ்த்தினர்.

நிகழ்வில் இறுதியில் தமிழீழ மகளிர் இசைக் குழுவினரின் எழுச்சி இசை நிகழ்வு இடம்பெற்றது. (மற்றொரு செய்தியும், படங்களும் 4ஆம் பக்கத்தில்) (ஒ-7)

## குருநகர் இளைஞர்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலுக்கு முன் உள்ள பஸ் நிறுத்தத்தில் பஸ்ஸை விட்டு இறங்கியபோது ஓட்டோவில் வந்தவர்கள் இவ்விளைஞர்களைச் சரமாரியாகச் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

உயிரிழந்த இருவரும் மைத்துனர் முறையானவர்கள் என்றும் -

வெளிநாட்டிலிருந்து வரவிருந்த உறவினர் ஒருவரை வரவேற்று யாழ்ப்பாணம் அழைத்து வரவே இவர்கள் கொழும்புக்குச் சென்றிருந்தனர் என்றும் -

அவர்களது உறவினர்கள் தெரிவித்தனர்.

இறந்தவர்களின் சடலங்கள் கொழும்பு பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கொலையுண்டவர்களின் பயணப்பொதிகள் கைத்தொலைபேசிகள், அடையாள அட்டைகள் மற்றும் 5ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றை கைப்பற்றிய கொட்டாஞ்சேனைப் பொலீஸார் விசாரணை மேற்கொண்டனர்.

இறந்தவர்களில் ஒருவரது பயணப்பொதியில் கொட்டாஞ்சோனை ஜம்பட்டா வீதியில் உள்ள முகவரி இருந்ததாகவும் -

இதனையடுத்து அந்த முகவரியில் தங்கியிருந்த இரு தமிழ்ப்பெண்களை பொலீஸார் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர் என்றும்- பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

(ஒ-51)

## அரசில் மட்டுமன்றி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்தில் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவின் தலைமையில் நடைபெற்றது. ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் குழு உறுப்பினர்கள் அனைவரும் இதில் கலந்துகொண்டனர்.

இந்தியாவின் அனுமதியைப்பெற்று வந்துள்ள ஜனாதிபதி, இன்னும் ஓரிருநாள்களில் முக்கியமான தீர்மானங்களை எடுத்தால் கட்சியின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றியே நேற்றைய கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது.

இதன்படி பொதுக்கட்டமைப்பு தொடர்பில் அரசு முதற்கட்ட நடவடிக்கைகளை எடுக்கும போது நாடாளுமன்றத்தில் அதற்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இவ்வாரம் பொதுக்கட்டமைப்பு தொடர்பில் அரசு நடவடிக்கைகள் எதனையும் எடுத்தால் நாடாளுமன்றத்தில் சபை அமர்வுகளுகககு சமுகமளித்து விவாதங்களைப் பகிஷ்கரிப்பதற்கு ஜே.வி.பி. முடிவு செய்துள்ளது.

அதேபோல் பொதுக்கட்டமைப்பிற்கு எதிராகப் பெருத்த எடுப்பில் நாடளாவிய ரீதியில் தொடர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும், பொதுக் கூட்டங்களையும் உடனடியாக நடத்துவதற்கும் நேற்றைய அரசியல் குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுமானால் அரசிலிருந்து வெளியேறுவதுடன் நின்றுவிடாமல் மாகாணசபைகளில் அரசிற்கு வழங்கிவரும் ஆதரவையும் வாபஸ் பெறுவதற்கு ஜே.வி.பியின் அரசியல் குழுமேலும் தீர்மானித்துள்ளது.

அதாவது அரசை மாத்திரமல்லாமல், மாகாண சபைகளில் உள்ள மாகாண அரசுகளையும் கவிழ்ப்பது என ஜே.வி.பி. தீர்மானித்திருக்கின்றது.

## சிவராம் படுகொலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல முக்கிய தகவல்கள் வெளியாகும் என்றும் -

பாதுகாப்பு வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த விவகாரம் குறித்து புளொட் பக்கத்தின் கருத்து இதுவரை தெரியவரவில்லை.

இதற்கிடையில் -

ஊடகவியலாளர் சிவராமின் படுகொலையுடன் அரசுக்கு ஆதரவான இரண்டு அரசியல் கட்சிகளின் தொடர்பு இருப்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளனவாம். எனினும் இக் கொலையுடன் தொடர்புடையவர்கள் அனைவரையும் கைதுசெய்யும் வரை விசாரணை தொடர்பான எந்த விவரத்தையும் வெளியிடுவதில்லை எனப் பொலீஸார் தீர்மானித்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

சிவராமின் படுகொலைக்கு சூத்திரதாரிகளாக இருந்து செயற்பட்ட இரண்டு அரசியல் கட்சிகளுமே அரசுக்கு ஆதரவானவை. இவற்றில் ஒரு கட்சி அமைச்சரவையிலும் இடம் பெற்றுள்ளதாம்.

இதுவரை பொலீஸாரினால் திரட்டப்பட்ட விவரங்களின் அடிப்படையில் அடுத்தவார இறுதிக்குள் விசாரணைகள் முடிவடையலாம் என நம்பப்படுகின்றது. விசாரணை முடிவுகள் வெளியாகும்போது அது சம்பந்தப்பட்ட நபர்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் தடுமாற்றமாக - இக்கட்டான ஒரு நிலையை ஏற்படுத்தலாம்.

விசாரணை விவரங்கள் வெளியானால் அது விசாரணையை முன்னெடுத்துச்செல்வதில் இடையூறுகளையும் முட்டுக்கட்டைகளையும் ஏற்படுத்தலாம் என்பதாலேயே எந்த விவரத்தையும் கடைசிச் சந்தேகநபர் கைதுசெய்யப்படும்வரை வெளியிடப்போவதில்லை எனப் பொலீஸார் தீர்மானித்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

O/L 2005
வினா விடை வகுப்பு
திங்கள் முதல் சனி வரை
காலை : 6.30 - 7.30
2004 O/L எடுத்த, 2005
O/L எடுக்கவுள்ள மாணவர்களுக்கு
கணிதம் P.ஜெயக்குமார்
விஞ்ஞானம் S.பாலச்சந்திரன்
ஆங்கிலம் P.N.சுதர்சன்
ஆரம்பம்: 10.06.2005, 6.30 a.m.
நல்லூர் சயன்ஸ் அக்கடமி
பிரதம பரீட்சகர், ISA, திரு.கணேசலிங்கம் அவர்களின் தரம்:5 புலமைப் பரிசிலுக்குரிய முதலாவது மாதிரிப் பரீட்சை. 11.06.2005 (சனி) காலை 10.00 மணி. (36226)
[விடையும் உடன் வழங்கப்படும்]

கணக்கீடு
2006 A/L
கம்பனிக் கணக்கு
ஆரம்பம்: 06.06.2005
(திங்கள் 4 மணி)
By:பாலவாசன் (B.BA. ,F.M.Spl.)
ஸ்ரார் கல்வி நிலையம், சுன்னாகம். (36217)

CATWAS.COM
Computer Academy
No.26, Somasundram Avenue, Chundukuli T.P: 021 2223805
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma in Hardware 15 days.
Diploma in Microsoft Office 30 days.
Diploma Courses
Ms-Office 1750/= DTP 2000/=
Hardware 1500/= Web Page 3000/=
Video Mixing 2500/=
Certificate Courses
Microsoft Kids Program (C-43220)

யாழ்மாவட்டத்தில் முதன்முறையாக
City & Guilds International London (U.K)
நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற
இன் நிறுவனத்தால் வழங்கப்படுகின்ற சான்றிதழ்கள் லண்டன், கனடா, சுவிஸ் உட்பட160 நாடுகளினால் அங்கிகரிக்கப்பட்டுள்ளது.
Telecommunication Systems
Electrical & Electronic Engineering
Constructuion Industry
ஆகிய துறையில் Charted Engineer ஆவதற்கான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
GCE (O/L) அல்லது GCE (A/L) படித்த இருபாலரும் சேர்த்துக்கொள்ளப்படுவர்.வகுப்புக்கள் யாவும் கொழும்பில் உள்ள apps நிறுவனத்தினால் நடாத்தப்படும்.
வகுப்புக்கள் ஆரம்பம் 12.06.2005
இம்முறை (2005) A/L பரீட்சைக்கு தோற்றுபவர்களும் அனுமதிக்கப்படுவர்.
மேலதிக விபரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
இல. 07, பலாலி வீதி யாழ்ப்பாணம்.
T.P:- 021-222 3335, 077 3151200

இதோ எமது புதிய வெளியீடாக
பலவர்ண அழைப்பிதழ் அட்டைகள்
எமது பலவர்ண நினைவு மலர் அட்டைகளுடன் இப்போது பல வர்ணங்களில் அமைக்கப்பட்ட பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா, புதுமனைப்புகுவிழா, திருமணம் மற்றும் விஷேட நிகழ்வுகளிற்கான அழைப்பிதழ் அட்டைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
கூல் லெமனேற்றிங் A4 - 1/= மட்டுமே.
சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்
இல. 183, பலாலி வீதி, கோண்டாவில்.
T.P : 222 6722

CHEMISTRY CENTRE
Temple Rd. (Green Park முன்னே)
A/L 2007 புதிய பிரிவு Mon., Wed. 5 - 6 p.m.
A/L 2006
ORGANIC CHEMISTRY
பிரிவு -I Mon., Wed., 6-7 p.m. (N.T.)
பிரிவு -II Mon., Wed., 7-8 p.m. (N.T.)
ஆரம்பம் : - 06.06.2005
By:- அன்பழகன் B.Sc. (c-43306)

Microsoft Office
Specially for GIT
பாடசாலை விடுமுறைக்கால வாரநாட்களில்
1 Month
3Hours Per Day
மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்
பதிவுகள் 09-06-2005இற்கு முன்னர் நேரில்
விபரங்களிற்கும், பதிவுகளிற்கும் நேரில், MCS,324 Palaly Road, Jaffna. ,பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

BEACON
யாழ்நகர்
LOGIC
A/L 2007
புதிய பிரிவு
ஆரம்பம்: 07. 06. 2005
8 a.m.
By: S.S. மனோகரன் (36222)

## துயர் பகிர்கின்றோம்

எங்கள்

### நந்தி அண்ணரின்

மறைவு ஈடில்லாப் பேரிழப்பாகும். அவரின் பிரிவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அனைவரோடும் நாமும் பங்குகொண்டு அவரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

இராசமணி - சிவநாசன் குடும்பத்தினர்.
திருமதி சிவமணி பரராஜசிங்கம்.
திருமதி சிவதேவி சிவநாசன்.
திரு சி.சிவநேசன். (36239)(53-30-11-34)

இராஜசூரியர் மனோன்மணி குடும்பத்தினர்
இ.சிவகுமாரன்,
திருமதி கலாநிதி சுந்தரலிங்கம்,
திருமதி தயாநிதி ஞானப்பிரகாசம்,
இ.ஈஸ்வரக்குமாரன்,
திருமதி குணநிதி யுகபாலசிங்கம்,
திருமதி சாந்தநிதி சாந்திக்குமார்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.